ன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 - 7 - 55 | இதழ் 6

காவலனுக்குக் "காவல்"!

பிரஞ்சுப் புரட்சியில் ஒருகாட்சி

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா

"எனது வாரிசு நீதான்!"

இரண்டாவது வட்டமேசை மாநாடு இலண்டன் மாநகரில் கூடி, முடிவு ஏதும் எடுக்காமல், முறிவுற்று முடிந்தவுடன் அதில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதிகள் இந்தியா திரும்பினர். அவர்களில் ஒருவரான சர் ஏ. இராமசாமி அவர்கள் சென்னை வந்து சேர்ந்தவுடன், வட்டமேசை மாநாடு பற்றிய முழுவிபரங்களையும் சென்னை மக்களுக்கு விளக்கிச் சொல்ல, சென்னை நேப்பியர் பார்க்கில் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

கூட்டத்திற்கு சர் ஏ. இராமசாமி அவர்கள் இசைவு தந்து வந்திருந்தார். அந்தக் கூட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்களும் சென்றிருந்தார்கள். சர் ஏ. இராமசாமி அவர்கள் பேசுவதற்கு முன்னால் சிறிதுநேரம் பேசும்படி அறிஞர் அண்ணா அவர்களைக் கூட்டம் கூட்டினோர் கேட்டுக்கொண்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களும் பேச இசைந்து அக்கால வழக்கப்படி ஆங்கிலத்தில் சிறிதுநேரம் பேசினார்கள்.

வட்டமேசை மாநாடு முறிவுற்று நாட்டின் தலைவர்கள் இந்தியா திரும்பிய அதே நேரத்தில், வெளிநாடு சென்றிருந்த இந்திய கிரிக்கட் குழுவினர் வெற்றியுடன் திரும்பி வந்திருந்தனர். அறிஞர் அண்ணா அவர்கள் இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் மனதில் வைத்துக்கொண்டு, "நமது தலைவர்கள் வட்டமேசை மாநாடு சென்று தோல்வியைச் சுமந்துகொண்டு வந்தாலும், கிரிக்கட் குழுவினர் வெற்றி ஏந்திக்கொண்டு வந்துள்ளனர். விவேகிகள் தேடித்தராத புகழை விளையாட்டுக்காரர்கள் தேடித்தந்துள்ளனர்" என்னும் கருத்துப்பட சர் ஏ. இராமசாமி அவர்களை வைத்துக்கொண்டு அஞ்சாமல் அயராமல் கூறினார்கள்.

சர் ஏ. இராமசாமி அவர்கள் பேசும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, விளையாட்டுக்காரர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது என்றும், விளையாட்டுக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட கோட்டிற்குள் நின்றுதான் விளையாடவேண்டும் என்றும், ஆனால் அரசியல் தலைவர்களுக்கு அப்படிப்பட்ட வரையறை ஏதும் இல்லையாதலால் வெற்றியை உறுதியாக எதிர்பார்க்க முடிவதில்லை என்றும் குறிப்பிட்டார்களாம்.

கூட்டம் முடிந்தவுடன் சர் ஏ. இராமசாமி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் முதுகைத் தட்டிக்கொடுத்து **"ஆங்கிலப் பேச்சில் எனது வாரிசு நீயாகத்தான் இருப்பாய்"** என்று கூறினார்களாம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15 - 7 - 55 வெள்ளிக்கிழமை

எது உண்மை?

"இந்திய சர்க்கார் வடநாட்டைவிட தென்னாட்டிற்குத்தான் அதிகம் செலவழித்துள்ளது" என்னும் கருத்துப்பட, சென்னை நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள், அண்மையில், திருச்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார். முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போன்ற அவரது கூற்றைக் கற்றறிந்த சான்றோர் கேள்விப்படின், அவர்கள் தோழர் சுப்பிரமணியம் அவர்களைப் பார்த்து எள்ளி நகையாடுவார்கள் என்பதில் ஐயமில்லை. அத்தோடு மட்டுமல்லாமல், "நான் இதனை அதிகாரப்பூர்வமாகக் கூறுகிறேன்" என்றும் கூறியுள்ள கூற்று, கற்றறிந்தோர் மேலும் மேலும் விழுந்து விழுந்து சிரிப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

நிதியமைச்சர் ஒரு பெரும் பொய்யைச் சொல்லுவதற்குத் துணிவு கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல், அதற்குச் சப்பைக் கட்டாகக் கட்ட தமது பதவியையும் அவர் நன்றாக அழைத்து நிறுத்துவது மிக்கக் கலிச்சிரிப்பை உண்டாக்குகிறது.

எந்த நிதியமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம், "இந்திய சர்க்கார் வடநாட்டைவிட தென்னாட்டிற்குத்தான் அதிகம் செலவழித்துள்ளது" என்று இப்பொழுது கூறுகிறாரோ, அதே தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் நான்கு திங்களுக்கு முன்பு ஆவடியையடுத்த பெரியநாயகன்பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கில் பேசும்போது. "பெருந்தொழிற்சாலைகளைத் தென்னாட்டிலும் அமைக்கவேண்டும்; ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொழிற்சாலைகளை அமைப்பதால் அப்பகுதிகளில் மட்டும் செல்வம் குவியவும், அதே நேரத்தில், தென்னாட்டில், நாம் விரும்பாத, நமக்கு விரோதமான அரசியல் விளைவுகளும் ஏற்படும்" என்று தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். நிதியமைச்சரின் பெரிய நாயகன்பாளையம் பேச்சே அவரது திருச்சிப் பேச்சை மறுத்துப் பொய் என்பதை நிலைநாட்டுவதை அறிந்துகொள்ளலாம்.

"நான் இதனை அதிகாரப் பூர்வமாகக் கூறுகிறேன்" என்று அவர் கூறுகிறார்! கூறிவிட்டால் போதுமா? அதற்குப் புள்ளி விபரங்கள் காட்டவேண்டாமா? நாம், புள்ளிவிபரங்கள் மூலம், வடநாட்டில் 1000 கோடி ரூபாய்களுக்குமேல் நீர்ப்பாசன—மின்சாரத் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டுள்ளன என்றும், தென்னாட்டில் 100 கோடி ரூபாய்களுக்குக் குறைவாகவே செலவழிக்கப்பட்டுள்ளன என்றும் பல தடவைகள் சுட்டிக்காட்டிவந்துள்ளோம். நாம் மட்டுமல்லாமல், நிதியமைச்சருக்கு ஆதரவு காட்டும் கட்சியைச் சேர்ந்த பலருங்கூட, வடநாட்டைப் போற்றித் தென்னாட்டைப் புறக்கணிக்கும் இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும் சுட்டிக்காட்டியும் வந்துள்ளனர்.

காங்கிரசு ஏடாகிய **சுதேசமித்திரன்** ஒரு கார்டூன் படம் மூலம் மேற்கண்ட கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது. இந்திய சர்க்காரை ஒரு விருந்து வைப்பவர் போலவும், வடநாட்டையும் — தென்னாட்டையும் விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கும் இரு விருந்தினர் போலவும், அவர்கள் இருவரும் முறையே "வடநாடு—தென்னாடு" என்ற இரண்டு மேஜைகளில் உட்கார்ந்திருப்பது போலவும், விருந்துப் பணியாரங்களை யெல்லாம் வடநாட்டு மேசையில் மட்டும் பரிமாறி, தென்னாட்டு மேஜையில் ஒன்றுகூட பரிமாறாமல் புறக்கணிப்பதைப் போலவும் அந்தப் படம் வரையப்பட்டிருக்கிறது. மேலும் "**ஏன் இந்தப் பாரபட்சம்?**" என்று படத்திற்குத் தலைப்பிட்டு, இந்திய சர்க்காரைக் கேட்கிறது சுதேசமித்திரன்.

"பண்டித நேரு, எங்கு தொழிற்சாலைகள் தோன்றுகின்றனவோ அந்த இடத்தைத் தான், தாம் 'புண்ணிய சேத்திரமாகக் கருதுவோம்' என்று கூறியதைச் சுட்டிக்காட்டி, '**ஆனந்தவிகடன்**' என்ற காங்கிரசு ஏடு எழுதும்போது, "**நேரு குறிப்பிடும் பொருளாதாரப் புண்ணிய சேத்திரங்கள் அனைத்தும் வடநாட்டிலல்லவோ இருக்கின்றன**" என்னும் கருத்தை வெளியிட்டிருப்பது, நிதியமைச்சரின் திருச்சிக் கூற்று எவ்வளவு பொய்மையானது என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுவதாகும்.

சென்னை சிம்சன் தொழிற்சாலைகளின் ஊழியர்களின் மாநாடு 5-7-55-ல் நடைபெற்றபோது சிம்சன் தொழிற்சாலைகளின் நிருவாகத் தலைவர் தோழர் எசு. அனந்தராமகிருட்டினன் அவர்கள் கீழ்க்காணும் கருத்தை வெளியிட்டிருக்கிறார். அது வருமாறு :

"தொழில் வளர்ச்சித் திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்படுவதாகக் கூறும் கூற்று தவறான ஒன்றாகும் என்று குற்றாலத்தில் அண்மையில் அமைச்சர் ஒருவர் கூறியிருப்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. சென்னையோடு, திருவாங்கூர், கொச்சி, மைசூர் ஆகியவையும் சேர்ந்த சுமார் 6 கோடி மக்களைக் கொண்ட தென்னிந்தியாவில் மிகமிகக் குறைவானவர்கள்தான் தொழிற்றுறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். தென்னாட்டிலுள்ள மக்கள் நல்ல தொழில்புரியும் திறமை படைத்தவர்கள் ஆவார்கள். அவர்கள் உலகின் மற்றப் பகுதியிலுள்ள தொழிலாளர்க்கு எந்தவகையிலும் சளைத்தவர்கள் அல்லர். இப்படிப்பட்ட கோடிக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்க வழிவகைகள் செய்யப்படவேண்டும். தென்னிந்தியாவிற்கு மேலும் மேலும் பலப்பல தொழிற்சாலைகள் தேவை. இந்தியாவின் மற்ற பகுதிகளில், தென்னிந்தியாவைச் சேர்ந்த ஏராளமானவர்கள் முக்கியமான இடங்களில் வீற்றிருக்கும் நிபுணர்களாகக் காட்சியளிக்கிறார்கள். தென்னிந்தியாவில் தொழிற்சாலைகள் வளர்ந்தால் அவர்களையெல்லாம் இங்கே அழைத்துக் கொள்ளமுடியும்"

தொழில் துறையிலே நன்கு தேர்ச்சிபெற்றுள்ள தோழர் அனந்தராமகிருட்டினன் கருத்துரை நிதியமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கும், அவரைச் சார்ந்தோர்க்கும் தெளிவு பயக்கும் என்று கருதுகிறோம்.

'வடநாடு வளர்கிறது, தென்னாடு தேய்கிறது' என்பது பற்றிய நிலைமைகளையும், சான்றுகளையும், கருத்துரைகளையும் ஆயிரக்கணக்கில் நாம் ஆதாரமாகக் காட்டிவரும்போது, நிதியமைச்சர் "இந்தியசர்க்கார் வடநாட்டைவிட தென்னாட்டிற்குத்தான் அதிகம் செலவழித்துள்ளார்கள்" என்று கூறுவது, எவ்வளவு பொய்மையின்பாற்பட்ட கூற்று என்பதை உணர்ந்துகொள்ளலாம். காங்கிரசு அமைச்சுப் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள, தோழர் சி. சுப்பிரமணியம் எவ்வளவு பொய்ச்சப்பைக்கட்டு கட்டவேண்டிய இரங்கத்தக்க நிலைமையிலிருக்கிறார் என்பதை நாம் இ லிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சென்னை மாநில நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம், "வடநாட்டைவிட தென்னாட்டுக்குத்தான் அதிகம் செலவழித்துள்ளது" என்று சொல்லிவிட்டார். எந்த வரவு செலவு கணக்கை அவர் தன்முன் வைத்துக்கொண்டு, இந்த முடிவை அவர் வெளியிட்டாரோ தெரியாது. பெரியநாயக்கன் பாளையத்தில் "பெருந் தொழிற்சாலைகளைத் தென்னாட்டில் அமைக்கவேண்டும்" என்று பேசியபொழுது அவர் வைத்திருந்த புள்ளி விவரங்கள் திருச்சியில் எப்படி மாறிவிட்டது என்று நமக்குத் தெரியவில்லை, பெரியநாயக்கன் பாளையத்தில், "வடநாடு—தென்னாடு" ஏட்டில் தென்னாட்டுக்கு நஷ்டம் என்று காட்டிய கணக்கு, திருச்சிக்கு வந்ததும் திடீரென லாபக் கணக்காக எப்படி ஆயிற்றென்பது நமக்குப் புரியவில்லை, அவர் நிதிமந்திரி வரவு-செலவு விவகாரங்களில் தேர்ந்தவர் நஷ்டத்தை லாபமாகவும், லாபத்தை நஷ்டமாகவும் காட்டவல்ல அபார வித்தை தெரிந்திருக்கலாம். அவருடைய ஏட்டுக் கணக்கில் —எண்ணத்தில் எந்தக் குறைபாடு ஏற்பட்டதோ நமக்குத் தெரியாது, பெரியநாயக்கன் பாளையத்தில் அவர் பேசியதற்கும், திருச்சியில் அவர் பேசியதற்கும் இடைப்பட்ட காலத்தில், தென்னாட்டு வளத்தில் இம்மியளவு மாறுதலும் ஏற்படவில்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது.

கனம் சுப்பிரமணியம் நிதிமந்திரி, மாகாணத்தின் பொருளாதாரம் முழுவதும் தெரிந்துதான் அவர் சொல்வதாகச் சிலர் நினைக்கலாம். அவர் பேசியதைக் கேட்டதும், அப்படித்தான் தோன்றும். கனம் சுப்பிரமணியத்தின் கூற்றை மறுத்துரைப்பதுபோல மற்றொருவரின் பேச்சு செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளது.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குறிப்பாகத் தொழிலபிவிருத்தித் துறையில் சென்னை, ஆந்திர மாநிலங்களுக்கு நியாயம் வழங்கவேண்டும். மாநிலங்கள் அடுத்த நிதிக்கமிஷனிடமிருந்து அதிக வருமானத்துறைகளை அடைய முற்படவேண்டும்".

இந்தக் குறையைத் தெரிவித்துக்கொண்டவர், தேசியத் தொண்டிலோ, நிதி நிர்வாகத் தொண்டிலோ, பதவியிலோ கனம் சுப்பிரமணி

த்துக்கு எள்ளளவும் குறைந்தவரல்லர். மேற்கண்டவாறு, தென்னாட்டுக்கு ஐந்தாண்த் திட்டங்களில் நியாயம் வழங்க வேண்டும் ன்று எடுத்துக்காட்டியவர் ஆந்திர மந்திரி னம் கோபாலரெட்டியாகும். கனம் சுப்பிர ணியம் ஒரு நிதிமந்திரி என்றால், அவரும் ரு நிதிமந்திரி. இவரைப்போலவே அவருக் நம் நாட்டின் பொருளாதார நிலை தெரிந் திருக்கவேண்டும். தனது பேச்சில், ஆந்திரா வைமட்டும் பேசியிருந்தாலாவது, கனம் சுப்பிர ணியம் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் அவர் "ஆந்திரா, சென்னை" இரு மாநிலங்களை ம் சேர்த்தே பேசியுள்ளார்.

" ஐந்தாட்டுத் திட்டத்தில், ஆந்திர, சென்னை மாநிலங்களுக்கு நியாயம் வழங்க வண்டும் !" என்று கனம் கோபாலரெட்டி கட்கிறார். அதற்கு என்ன பொருள ? ந்தாண்டுத் திட்டத்தில் சென்னை, ஆந்திரா குதிகளுக்கு அநியாயம் இழைக்கப்படுகிறது ன்றுதானே பொருள்படும்.

" அடுத்த நிதிக்கமிஷனிடமிருந்து, அதிக ருமானத் துறைகளை நாம் பெறவேண்டும்" அடுத்தபடி கோபால ரெட்டியார் தரும் யாசனை அது. அதனுடைய விளக்கம் ன்ன ? நமது முக்கியமான வருமானத் துறைகளையெல்லாம் டில்லி அரசாங்கத்திடம் ருக்கிறது. அந்த வருமானத் துறைகளை ம் பெறவேண்டும்.

சென்னை நிதிமந்திரியின் பேச்சுக்கு, ஆந்திர நிதிமந்திரியின் பேச்சு சரியான பதிலாகும் னென்றால், ஆந்திர நிதிமந்திரி இந்த உண் மகளை வெளியிட்ட கூட்டத்தில்—அது சென்னை தசப்பிரகாஸ் விருந்துமண்டபத்தில் டைபெற்றது—கனம் சுப்பிரமணியம் அவர் ரும் அங்கு இருந்திருக்கிறார். கோபாலரெட் யின் பேச்சை அவர் மறுத்துப் பேசியதாகத் தெரியவில்லை. கேட்டுக்கொண்டுதான் இருந் ருக்கிறார், இறுதியில் கோபாலரெட்டியைப் பாராட்டியும் பேசியிருக்கிறார் ! மறுநாள் "தேசமித்திரன்" பத்திரிக்கையில் "இடிமேல் டி" என்ற 'கார்ட்டூன்' படம் போட்டு, அதில் திட்டக்கமிஷன் என்ற கதவை சுப்பிரமணியம் கோபாலரெட்டி இருவரும் சேர்ந்து 'பெரிய சம்மட்டியால் அடிப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது !

நாம் வெளிப்படையாகக் கூறுகிறோம், ஐந்தாண்டுத் திட்டங்களில் திராவிடம் புறக் கணிக்கப்படுகிறது; திராவிடத்தின் பொருளாதாரம் டில்லி ஆதிபத்தியத்தின் கீழ் இருக்கிறது என்று, அதை நேரிடையாக ஒத்துக் கொள்ள தேசியவாதிகள் தயங்குகிறார்கள் ; அதெல்லாம் கிடையாது என்று பொதுக் கூட்டங்களில் ஓரிரு தடவை கூறினாலும் நாம் கூறுவதிலுள்ள உண்மை அவர்களைக் கலங்கவைக்கிறது. எனவேதான் "நியாயம் வழங்கவேண்டும் !" என்று தென்னாட்டுக்கு இழைக்கப்படும் அநியாயத்தைச் சுட்டிக்காட்டு கிறார்கள். நாம் கூறுவதைக் கேட்கும்பொழுது அவர்களுக்குக் கோபம் ஏற்பட்டாலும், வட நாட்டையும் தென்னாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு வேதனை தான் வருகிறது. விருந்து என்றபோதிலும், வேதனை வெளிப்பட்டுவிடுகிறது, உண்மை யைச் சொல்லிவிடுகிறார்கள். தசப்பிரகாசு விருந்துமண்டபத்தில் கனம் கோபாலரெட் டிக்கு அத்தகைய நிலை ஏற்பட்டது பெரிய நாயகன்பாளையத்தில், கனம் சுப்பிரமணிய மும் அதே நிலையில்தான் பேசியிருக்கவேண் டும். ஆனால் திருச்சியில் பேசும்பொழுது நம்மைப்பற்றிய கவனம் வந்துவிட்டதால், நட்டக்கணக்கை லாபக்கணக்காக மாற்றிச் சொல்லியிருக்கிறார். நம்மிடமுள்ள கோபம், கட்சி, பதவி இவற்றிலுள்ள பாசம் ! போகட்டும் !

'தென்னாட்டைவிட வடநாடு வளர்க்கப்படு கிறது' என்பது உண்மையா ? அல்லது 'வட நாட்டைவிட தென்னாடு வளர்க்கப்படுகிறது' என்பது உண்மையா ? ஏது உண்மை ? உள்ள நிலைமையையும், அறிஞர்கள் கருத்துரைகளை யும் வைத்துப் பார்த்தால், 'தென்னாட்டைவிட வடநாடே வளர்க்கப்படுகிறது' என்பது' தெளிவாக எவருக்கும் புலனாகும் !

கருத்துக் கதிர்

எந்தத் தைரியம்?

யாருக்கு இல்லை?

பெரியார் இராமசாமிக்கும் அண்ணாதுரைக்கும் காங்கிரசில் சேர தைரியம் கிடையாது என்று சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார். காங்கிரசில் சேர என்ன நேர்மையான தைரியம், எந்த அளவுக்குத் தேவை? அது எந்த வகையில் பெரியாரிடத்திலும் அறிஞர் அண்ணாவிடத்திலும் இல்லாமற்போயிற்று? என்பதற்கான விளக்கத்தைத் தோழர் சுப்பிரமணியம் குறிப்பிட்டிருப்பாரேயானால், அவரது கூற்று அறிவுடைமையின்பாற்பட்டதாக ஒருகால் கொள்ளக்கூடும்!

தோழர் சுப்பிரமணியம் அவர்களை ஏதோ பேசும்படி கூறியிருக்கிறார்கள், அவரும் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக இப்படிப் பேசியிருக்கிறார் என்றுதான் அவரது கூற்றினின்றும் கொள்ளவேண்டியிருக்கிறது. அவரது கூற்று வேறு எதனைத் தெளிவாக்கிக் காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவரது உள்ளம் மிகமிகக் குழம்பிக்கிடக்கிறது என்ற ஒன்றை மட்டும் தெளிவாகக் காட்டுகிறது.

தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கூற்றினின்றும் வேறொன்றும் மறைமுகமாகப் புலப்படுகிறது; பெரியாருக்கும் அண்ணாவுக்கும் காங்கிரசில் சேர தைரியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தோழர் சுப்பிரமணியத்துக்குக் காங்கிரசை விட்டு விலகத் தைரியம் இருக்காது என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது. ஏனெனில் அவர் காங்கிரசை விட்டு விலகினாலும், அல்லது காங்கிரசு அவரை விலக்கினாலும், அமைச்சர் பதவியும் [illegible] அதனோடு அமைந்த செல்வாக்கும் போய், கோவையில், மூன்றாந்தர நாலாந்தர வழக்கறிஞர் சுப்பிரமணியம் என்ற நிலைமைக்கு வந்து சேருவார். இவ்வளவு நலங்களைவிட்டுவிட அவருக்குத் தைரியம் எங்கிருந்து பிறக்கும்?

இன்றைய நிலையில் ஒருவன் எப்படிப்பட்டவனாக இருந்தபோதிலும், அவன் அரசியலில் எவ்வளவு இழிதன்மை பூண்டவனாக இருந்தபோதிலும், மக்கள் துரோகியாக இருந்தபோதிலும், காங்கிரசுக்கே ஒரு காலத்தில் துரோகம் செய்தவனாக இருந்தபோதிலும் அவன் நான்கு அணா செலுத்துவதற்கான 'தைரியத்'தையும், கதர் கட்டிக்கொள்வதற்கான (சிலநேரங்களில் மட்டும்) 'தைரியத்'தையும் பெற்றிருந்தால் போதுமே, அவன் உடனே காங்கிரசில் சேர்ந்துவிட அருகதையுண்டே! இத்தகைய தைரியப் பரீட்சையில் தேறவேண்டும் என்று, தோழர் சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராய் இருந்து விலகிய பெரியார் இராமசாமியையும், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிவளர்த்த அறிஞர் அண்ணாவையும் கூவி அழைக்கிறார்! காங்கிரசில் சேருவது, தோழர் சுப்பிரமணியம் போன்றவர்களுக்கு வேண்டுமானால் தைரியமான செயலாக இருக்கக்கூடும்; ஆனால் அது பெரியார் இராமசாமி அவர்களுக்குக் கழித்துவிட்ட செயல், அறிஞர் அண்ணா அவர்களுக்கு வெறுப்பூட்டும் செயல் ஆகும்.

தோழர் ராசா சிதம்பரம் போன்றவர்கள் இப்பொழுது காங்கிரசில் சேர்ந்துள்ள தைரியத்தைக் காட்டி, அந்தத் தைரியம் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கிடையாது என்று தோழர் சுப்பிரமணியம் கூறுகிறார் என்பதுதான் உண்மை என்றால், அந்தவகையில் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களின் கூற்று சரியானதுதான். மக்களுக்குத் துரோகமிழைக்கும் நேர்மையற்ற தைரியம் தோழர் ராசா சிதம்பரம் போன்றவர்களுக்கு வரும்! ஆனால் அது எல்லோர்க்கும் எப்படி வரும்? தன்மானத்தைப் பற்றிக் கவலைப்படாத தோழர் ராசா சிதம்பரம் போன்றவர்களுக்குத்தானே அந்தத் தைரியம் வரமுடியும்! அந்த வகையில் தோழர் சுப்பிரமணியம் அவர்களின் கூற்று உண்மைதான்!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ..	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

காவலன்-ஒரு கைதி!

[இரா. செழியன்]

வார்செய்ல் அரண்மனை! விருந்து மண்டபம் கோலாகலத்துடன் விளங்கியது. மணிச்சரங்களில் தொங்கும் வண்ணவிளக்குகள் மண்டபத்தை ஒளிசெய்தன. சீமான்கள், சீமாட்டிகள், சிரித்துப் பேசுபவர்கள்—சிரித்துச் சித்ரவதை செய்யும் சிங்காரவல்லிகள், ஆடம்பரப் பிரியர்கள், அலங்கார உடையினர், பகட்டு மொழியினர், பசப்பு விழியினர், வேல் வீசுபவர்கள், வேலைகேட்பவர்கள்—பிரெஞ்சு நாட்டின் ஆடம்பரர்—அலங்காரப் பிரபுக்கள் அங்கே குழுமியிருந்தனர். அரண்மனை விருந்தில் மதுவுக்கு குறைவா? மந்தகாசத்துக்குக் குறைவா? பொற்கிண்ணங்களில் மது சுற்றிவந்தது, பொன்னிதழ்களில் மது வழிந்தது. கனிரசம் வேண்டிக் காத்திருந்தவர்கள் கைகொடுத்து அழைத்துச்சென்றனர். இசை தொடர்ந்து வந்தது. சீமான்கள் சிங்காரவல்லிகளை இறுக அணைத்துக்கொண்டு நடனமாடினர். சுற்றிலும் முதுமையடைந்த சீமான்கள், முதுமையடைந்ததை மறைக்கமுடியாத சீமாட்டிகள் அமர்ந்து, மதுக்கோப்பைகளைச் சுவைத்து, தங்களது வாலிப் பருவத்தை நினைத்தவண்ணம் இருந்தனர். மற்றும் "இந்தக் குமரி யார்?" "அந்தக் கோமாளியை பிரபுவென்று நாம் ஏற்றுக்கொள்வதா?" "அடுத்த விருந்துக்கு யார்யாரை அழைப்பது?" "அவன் அரசன் கட்சியா? அரசி கட்சியா?" "அடுத்த மந்திரிசபையில் —க்கு இடம் கிடைக்குமா?" இப்படி அரசியல் பேச்சுகள் அந்த பிரபுக்களிடை உலவிக்கொண்டிருந்தன.

நடுநிசியாகியும், நடனம் ஓயவில்லை, குதுகலம் நிற்கவில்லை, மதுக்கிண்ணங்கள் குறையவில்லை. சிரிப்பும், சத்தமும், பிதற்றுதலும், கொஞ்சுதலும் வளர்ந்திருந்தன.

ஒரு பிரபு மதுக்கோப்பையைக் காலிசெய்துவிட்டுத் திரும்பினர், பக்கத்திலிருக்கும் பிரபுவிடம் ஒன்றுபேச. அப்பொழுது அவருடைய காரியதரிசி பக்கத்தில் வணக்கத்துடன், நின்றன்.

"உன்னை பாரிசில் விட்டுவந்தேன். இங்கு ஏன் வந்தாய்?"

"ஒரு முக்கியமான செய்தி சொல்லவேண்டும்?"

பிரபுக்களுக்கு விருந்து, நடனம், அரண்மனை இவைகளைத் தவிர முக்கியமானது எதுவும் இருக்கமுடியாது, ஆனால் சாமான்யர்களுக்கு அது தெரிகிறதா? பிரபு தனது பொன் டப்பியைத் திறந்து ஒரு சிட்டிகைப் பொடியைத் தனது இடது கையினமீது தூவி, மிக லாவகமாக அதை முகர்ந்துவிட்டு, காரியதரிசியை அருகே அழைத்துக் கேட்டார். மிக மெதுவாக அவன் சொன்னன், தட்டுத்தடுமாறி, சற்று பயத்துடன்.

அலட்சியத்துடன் கேட்ட பிரபுவின் முகத்தில் கவலை அரும்பியது. பக்கத்திலிருந்த பிரபுவைக் கூப்பிட்டு, அவரிடம் மெதுவாகச் சொன்னர். சிறிது நேரத்தில் அங்கிருந்த பிரபுக்கள் சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து குசுகுசுவெனப் பேசிக்கொண்டனர். நடனமாடுபவர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் இன்னதென்று விளங்கவில்லை.

"எல்லாம் சரியாய்ப் போய்விடும். கவலைப் படத் தேவையில்லை!" ஒரு பிரபு சொன்னர்.

"சொல்லமுடியாது!"

"என்ன, என்ன?" நடனமாடுபவர்கள் கேட்டனர்.

"பாரிஸ் நகரத்தில் ஏதோ அமளியாம்!"

"பூ! அதற்குத்தானா இவ்வளவு அடக்கமான பேச்சு!" வாலிபச் சீமான்கள் அலட்சியம் செய்தனர். ஆனால் வயோதிகச் சீமான்களுக்கு நிலைமை திருப்திகரமாகப் படவில்லை.

"ஆச்சரிக்கம் கண்டிப்பாக இருக்கவேண்டும்!" ஒரு பிரபு மெதுவாகச் சொன்னர்.

"சரியான மந்திரி இருந்தால் நிலைமையைச் சமாளித்துவிடலாம்!" மற்றொரு பிரபு யோசனை கூறினர். அடுத்த மந்திரி பதவித் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருப்பவர் அவர்.

"காலம் கெட்டுப்போகிறது. சந்தைக் கும்பல்களுக்கு இடம் கொடுத்தால், பின் யாராலும் அடக்கமுடியாத அழிவு பிரான்சுக்கு நேரும். அரசன் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!"

"அரசனா? அரசி எடுக்கவேண்டும் என்று சொல்லுங்கள்!" ஒரு பிரபு மெதுவாகச் சொன்னார். அரசியல் விவகாரங்களில், அரசன் பதினாறுவது லூயியைவிட அரசி மேரி அன்டாய்னெட்டுக்குத்தான அதிக செல்வாக்கு இருந்தது. இது அரண்மனைப் பிரபுக்களுக்கு நன்கு தெரிந்ததாகும்.

"பாரிசில் நடந்த இச்சம்பவம் அரசருக்குத் தெரியுமா?"

"தெரியாது, விருந்து முடிந்ததும், சோர்வு அதிகமாக இருந்ததால் அரசர் தனது படுக்கைக்குச் சென்றுவிட்டார்."

"இந்தச் செய்தியை அரசருக்கு எப்படியாவது சொல்லியாகவேண்டும்" என்று பிரபுக்கள் துடித்தனர். அவர்களுக்கு அது மிக முக்கியமானதாகப்பட்டது. ஆனால் படுக்கையறைக்குள் போய், தூக்கத்திலிருக்கும் அரசரை எழுப்பி, யார் சொல்லமுடியும்?

நல்லவேளையாக லியான்கூர்த் என்ற பிரபு அப்பொழுது அந்தப் பிரபுக்களிடை சிக்கினார், பிரபுக்கள் அவரிடம் செய்தியைச் சொல்லி, அரசரிடம் போகும்படிச் சொனனார்கள். லியான்கூர்த் பிரபுவுக்கு அரண்மனையில் செல்வாக்கு அதிகம். அரண்மனையில், எங்கு வேண்டுமானாலும், எந்தப் பொழுதிலும் போகும் உரிமை அவருக்கு இருந்தது. அந்த உரிமையின் காரணமாக, அவர் அரசரின் படுக்கையறைக்குப் போனபொழுது காவலாளிகளால் தடைசெய்ய முடியவில்லை.

லூயி மன்னன் படுக்கையில் நன்றாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். படுக்கையில் அலங்கோலமாக—பசிதீர்ந்ததும் களைப்புடன் உறங்கும் குழந்தையைப்போலக் கிடக்கும் மன்னனைப் பார்த்ததும், லியான்கூர்த் பிரபுவுக்கு அவன்மீது இரக்கம் உண்டாயது. மிக இளவயதில் 16-வது லூயி முடிசூட்டப்பட்டான். சிதறிக்கிடந்த ஆட்சியை—பொருளாதாரத்தைச் சேர்த்துக்கட்டும் ஆற்றல் அவனிடம் இல்லை. மிக மந்தபுத்தி, தடுமாற்றம் அதிகம், அருகிலிருப்பவர்கள் போடும் தூபங்களுக்கு ஒத்துக்கொள்ளும் சுபாவம் இவைகளால் அல்லற்பட்ட மன்னன் படுக்கையில் அப்பொழுது நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தான். லியான்கூர்த் பிரபு மன்னனை எழுப்பினார்.

மன்னன் சோம்பலுடன் கண்ணை விழித்தான்.

பிரபு தலைவணங்கினார்.

என்ன செய்தியென மன்னன் கையசைவால் கேட்டான்.

"பாரிஸ் நகரிலிருந்து செய்தி! பாஸ்டில் கோட்டை விழுந்துவிட்டதாம்! நகரம் ஆர்ப்பாட்டக்காரர்கள கையில இருக்கிறதாம்!"

"என்ன கலகமா?" அரசன் கேட்டான், சற்றுக் கவலையுடன்.

"இல்லை, அரசே! புரட்சி!" பிரபு பதிலிறுத்தார், சற்று பயத்துடன்.

* * *

1789 ஜூலை 14! அன்றுதான் பாஸ்டிலிச் சிறைச்சாலை வீழ்ந்தது! பிரெஞ்சு நாட்டுக்கு மட்டுமல்லாமல், உலகுக்கே ஜூலை 14 முக்கியத்துவம் வாய்ந்த நாளாக மாறிவிட்டது! பாஸ்டிலி வீழ்ந்து, ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாகியும் அந்த நாள் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரப்படுகிறது; ஆண்டுதோறும் விடுதலை ஆர்வங்கொண்டவர்களால் கொண்டாடப்படுகிறது!

"பாஸ்டிலி வீழ்ந்தது!" போராடிய மக்கள் வெற்றிமுழக்கமாகக் கூவினர். அந்த முழக்கம் காலமெனும் குன்றின்மீது பட்டு எதிரொலித்தபடி இருக்கிறது.

மறக்கமுடியாத நிகழ்ச்சி உலக வரலாற்றில் பெரும் மாறுதலைச் செய்த நாள்—1789 ஜூலை 14!

பாஸ்டிலி வீழ்ந்தது! அதை இன்றும் நாம் கொண்டாடுகிறோம். ஆனால் நிகழ்ச்சி நடந்த அன்று, 1789 ஜூலை 14-ந் தேதி—பாரிஸ் நகருக்குப் பக்கத்திலிருந்த வார்செயல் அரண்மனையில் அதைப்பற்றிய கவனம் பலருக்கு இல்லாமலிருந்ததாம்.

பயங்கரச் சிறையாம் பாஸ்டிலி மீது, மக்களின் கோபப் பார்வை பாய்ந்தது! நாள் முழுவதும் போராட்டம்! பலர் தங்களைக் காணிக்கையாகத் தந்தனர், பலியாயினர்; ரத்தம் சிந்தப்பட்டது, முழக்கம் அதிகமானது! ஆவேசத்துடன் மக்கள் தாக்கினர்! பாஸ்டிலி வீழ்ந்தது; பாரிஸ் நகரெங்கும் ஆரவாரம் கேட்டது! ஆனால் மிக அருகாமையிலிருந்த மன்னன் மாளிகையில், பாரிஸ் எழுச்சி பற்றி, பாஸ்டிலி வீழ்ச்சிபற்றி சரிவரத் தெரியவில்லை! பாஸ்டிலிக் கோட்டையைச் சுற்றி மக்கள் போராடுவது, கடைசியாக அது வீழ்ந்தது எல்லாம் "மிகக் குழப்பமான நிலையில், வெகு தூரத்தில் போடப்படும் சத்தத்தின் எதிரொலியைக் கேட்பது போன்று" செய்திகள் வார்செயல் அரண்மனைக்கு வந்தனவாம்.

"குழப்பம்!"

"தெருச்சண்டை!"

"சில பேர்கள், ஆனால் அதிகமான கூச்சல் போடுகிறார்கள்!"

"ஆர்ப்பாட்டக்காரர்கள் குரல் கம்மியதும் அக்குரல் அடங்கிவிடும்!"

இப்படி அலட்சியமாகவும், சிறிதாகவும், 1789-ம் ஆண்டு ஜூலை 14-ந் தேதி பாஸ்டிலி இருந்த நிலை அரண்மனையில் பேசப்பட்டுவந்தது. பாஸ்டிலி வீழ்ந்தது! பாரிஸ் நகரமக்கள் கோபத்தின் கனல் இன்னும் அடங்கவில்லை, ஆனால் அரண்மனையில் எவ்விதத் தடங்கலுமின்றி விருந்து வேடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. மாலையில் பாஸ்டிலிக் கோட்டை வீழ்ந்த செய்தி லூயி மன்னனுக்குத் தெரியாது; அவன் படுக்கைக்குச் சென்றுவிட்டான். நடுநிசியில் ஒரு பிரபு, அவனை எழுப்பித் தெரிவித்தபொழுதுதான், பாஸ்டிலி விழுந்துவிட்டது, மன்னனுக்குத் தெரியவந்தது. அப்பொழுதுகூட, பாஸ்டிலி வீழ்ந்த தன் முக்கியத்துவத்தை மந்தமதி படைத்த மன்னன் உணரவில்லை. "பாஸ்டிலி வீழ்ந்துவிட்டது!" என்று அறிவிக்கப்பட்டதும், "கலகமா" என்று மன்னன் கேட்டான். நிகழ்ச்சிகளின் போக்கை ஒருவாறு உணர முடிந்த பிரபுதான், "இல்லை, அரசே! புரட்சி" என்று கூறினார்.

மக்களிடை என்ன நடைபெறுகிறது என்பதை உணராத நிலையில் பிரெஞ்சு மன்னர்கள் ஆண்டுவந்தனர். மக்களின் நிலையை மன்னனிடமிருந்து மறைக்க, பிரபுக்களும் மதக்குருமார்களும் பெரிதும் பாடுபட்டனர். மன்னர்களும் நாட்டைப்பற்றிக் கவலைப்படவில்லை. அரசாங்கத்தின் வரிப்பணத்தில் கிடைக்கும் அரண்மனை வாழ்வும், குதூகலங்களும், ஆடம்பரமும், மந்தகாசமும் அவர்களுக்குப் பெரிதாகப்பட்டதேயன்றி, அரசாங்கத்தின் பொறுப்புகள் அவர்களுக்குத் தெரியவில்லை. அரசர்களுக்குப் பதிலாகத் திறமைமிக்க மந்திரிகள், பலம் மிகுந்த பிரபுக்கள் நாட்டை ஆண்டுவந்தனர். இதனால் அரண்மனையில் போட்டி, பொறாமை, பதவிச்சண்டை, பிரபுக்களுக்குள் கட்சி மாற்றுக்கட்சிகள் நிலவின. நாட்டின் நிலை தெரியாமல், மன்னனும், மன்னனைச் சார்ந்தவர்களும் வாழ்ந்தனர்.

பாஸ்டிலி வீழ்ந்தது, லூயி மன்னனும், முதலில் ஆச்சரியப்பட்டான் பின் "மக்கள் இப்படிச் செய்தனரா?" என்று திகைத்தான்; நாட்டு மக்களை எதிர்த்து நிற்பது என்பது இனி முடியாதுபோலிருக்கிறது என்று பயந்துபோனான். பாஸ்டிலி வீழ்ந்ததற்கு மறுநாள், அதாவது ஜூலை 15-ந் தேதி, பிரெஞ்சு தேசிய அசெம்பிளிக்கு லூயி மன்னன் சென்றான். மன்னன் கட்டளைப்படி மக்கள் சபை கூடும், வரிகளைத் தரும், பின் கலையும். ஆனால் பாஸ்டிலி வீழ்ந்ததற்கு மறுநாளே மன்னன் லூயி பிரெஞ்சு தேசிய அசெம்பிளிக்கு வருவதாக வலுவில் ஒப்புக்கொண்டான்.

பிரபுக்களுக்கு இது பெரிய கிலியைக் கொடுத்தன, நாடாளும் மன்னன், சாமான்யர்கள் கூடும் கூட்டத்துக்குச் செல்வதா என்று எதிர்த்தனர். பிரெஞ்சு அரசியலில் பிரபுக்கள் குழு, மதக்குருமார்குழு, மக்கள் குழு, என்று மூன்று சபைகள் இருந்தன. 1789-ஜூன் மாதம் 12-ந் தேதி இந்த சபைகள் கூடிய பொழுது, மூன்று குழுக்களும் ஒன்றாகக் கூட வேண்டுமென்றும், எல்லோருக்கும் ஒரேவிதத் தகுதி தரப்படவேண்டுமென்றும் மக்கள் சபை — மூன்றாவது சபை — கூறியது. "சாமான்ய மக்களுடன்—ஏழைபாழைகளுடன் நாங்கள் சமமாக உட்காருவதா?" என்று மதக்குருமார்களும், பிரபுக்களும் முதலில் கொக்கரித்தனர். மக்கள் சபையைக் கலைத்து விட முயன்றனர், கூடியிருப்பவர்களை விரட்டி விட முயன்றனர். ஆனால் மூன்றாவது சபையான மக்கள்குழு எதற்கும் அசைந்துகொடுக்க மறுத்தது. "மக்களின் சம்மதத்தின் பேரில் நாங்கள் கூடியிருக்கிறோம். எங்களை யாரும் அகற்றமுடியாது" என்று தேசிய அசெம்பிளி என்ற பெயருடன் பிரெஞ்சு நாட்டுக்குப் புதிய அரசியல் சட்டதிட்டத்தை வகுக்கும் வேலையில் ஈடுபட்டது.

"மக்களின் சம்மதத்தின்பேரில் கூடியிருக்கிறோம்!" அந்த ஒரு வாக்கியமே மன்னனின் அதிகாரத்தையும், பிரபுக்களின் உரிமைகளையும், மதக்குருமார்களின் "தெய்வீக" மேம்பாட்டினையும் சிதறடித்தது. பிரபுக்களும், மதக்குருமார்களும் கோபித்தனர், உறுமினர், மன்னனுக்கு ஆலோசனைகள் பல தந்தனர். ஆனால் தேசிய அசெம்பிளியைக் கலைக்கக்கூடிய பலம் யாருக்கும் இல்லை. அசெம்பிளி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாஸ்டிலி வீழ்ச்சிக்குப் பின், தேசிய அசெம்பிளியைக் கலைக்கமுடியும் என்ற எண்ணம் மறைந்துவிட்டது. மக்களைச் சமாதானப் படுத்த, லூயி மன்னன் தேசிய சபைக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது,

தேசிய சபையில், மன்னன் மிகப் பணிவுடனேயே பேசினான். "நாட்டு மக்களிடம் எனக்கு அன்பும் நம்பிக்கையும் இருக்கிறது. நாட்டு மக்கள் என்னிடம் காட்டும் அன்பையும், பணிவையும் நான் அறிவேன். அதனால், வார்செயல், பாரிஸ் இரண்டிலும் நிறுத்தப்பட்டிருக்கும் இராணுவத்தை வெளியேறச் செய்கிறேன்."

புரட்சியை அடக்க, தேசிய சபையைக் கலைக்க, இராணுவத்தை நிறுத்தியிருப்பதாக ஒரு புகார் இருந்தது. அதை நீக்க மன்னன் முன்வந்தான். மேலும் பாஸ்டிலி கோட்டையைத் தரைமட்டமாக்கும்படி மன்னன் உத்து விட்டான்.

மக்கள் மனமகிழ்ந்தனர், பயமுறுத்திக் கொண்டிருந்த இராணுவத்தினர் நீங்கிவிடுவர், பாஸ்டிலி இடிக்கப்படும் என்று. ஆனால் அரசனின் அறிவிப்பு பிரபுக்களிடம் திகிலை உண்டாக்கியது, இப்படி விட்டுக்கொடுத்தால் அது எங்கு கொண்டுபோய்விடும் என்று அவர்கள் நினைத்தது பொய்யாகவில்லை.

வார்செயல் என்றாலே பாரிஸ் நகரத்து மக்களுக்கு ஒருவித வெறுப்பு! பாரிஸ் நகரத்தை விட்டுத் தள்ளி, சற்று தூரத்தில் அது இருந்தது. லூயி மன்னனின் அரண்மனை, மண்டபங்கள், மாளிகைகள், புல்வெளிகள், எல்லாம் அங்கு இருந்தன. பிரபுக்கள் அடிக்கடி கூடுமிடமாகவும் இருந்தது. வார்செயல் என்றால் ஏதோ மக்களுக்கு எதிராகச் சதித்திட்டங்கள் உருவாகும் இடம் என்று மக்கள் நினைத்தனர். ஆதலால் அரசன் வார்செயலில் இருப்பதைவிட பாரிஸ் நகருக்கு வந்துவிட்டால் நல்லது என்று பாரிஸ் நகரமக்களுக்குத் தோன்றியது.

"லூயி மன்னன் பாரிசுக்கு வந்துவிடட்டும்!" முதலில் மக்களிடை பேச்சு ஆரம்பமானது. கொஞ்சம் ஆவேசக்காரர்கள், "மன்னர் விரைவில் வராவிட்டால், நாமெல்லோரும் வார்செயல் சென்று அரண்மனையை இடித்து, பிரபுக்களை விரட்டியடித்து, மன்னரை கையுடன் அழைத்துவந்துவிடுவோம்" என்று நான்குபேர் கூட்டங்களில் பேசவே ஆரம்பித்துவிட்டனர். இந்த வேண்டுகோள்—பார்க்கப்போனால் மக்களின் எச்சரிக்கை, மன்னனுக்கு எட்டியது. மன்னன் 16-வது லூயி மிகப் பலவீனமான மனம் படைத்தவன். ஒருபுறம் மக்களின் அழைப்பு, மற்றொருபுறம் பிரபுக்களின் தடை. கடைசியாக மனம் குழம்பிய நிலையில், மன்னன் பாரிஸ் நகருக்குக் கிளம்பத் தயாரானான்.

மன்னனுக்கு உள்ளூர பயம்தான். கிளம்புவதற்குமுன் மாதாகோவிலுக்குப்போய், தொழுகைநடத்தினான். பிரியும்பொழுது, அரசி அழுதுகொண்டே விடைகொடுத்தாள். மன்னன் மிக சோகத்துடன், பயபக்தியுடன் கிளம்பினான். அவன் சென்றது "ஏதோ சாவை எதிர்நோக்கிச் செல்வதைப்போலிருந்தது" என்று ஒரு சரித்திரக்காரர் குறிப்பிடுகிறார். லூயி மன்னன் உயிரோடு சென்றான், உயிரோடு திரும்பினான். ஆனால் சாவை எதிர்

நோக்கி ஒன்று சென்றது. அது தான் பிரெஞ்சு அர னுடைய உரிமை! முன்பு மன்னன் ட்டளை யிடுவான், க்கள் அடிபணி வார்கள். இப்பொ ழுது மக்கள் கட்ட ளையிடுகிறார்கள் ன்னன் அடிபணி கிறான்!

மன்னனைப் பின் தொடர்ந்துமுக்கிய மான பிரபுக்களும், அசெம்பிளி உறுப் பினர்களும் சென்ற னர். நகருக்குள் நுழைந்ததும், வழி நெடுக மக்கள் கூடி இருந்தனர். அவர் ளில் பலரின் கை ளில் நீண்ட இரும் க் கம்பிகள், அரி வாள், கத்தி, துப் பாக்கி போன்ற பல வித ஆயுதங்கள் இருந்தன. புரட்சிச் ன்னமான மூவர் ணக்கொடிகள் எங் ம் காணப்பட் ன. தெருக்களின் இருமருங்கிலும் மக் ள் நெருங்கியிருந் னர். மன்னனின் காச் வண்டி கண்

“ மன்னனை மக்கள் வென்றனர்.”

னில் பட்டதும் மக்கள் ஆரவாரித்தனர், வாழ்த்தொலிகள் கிளப்பினர். ஆனால் அவர் ள் ஆரவாரித்தது, வாழ்த்தியது எல்லாம் ன்னனையல்ல; “ வாழ்க தாயகம்!” “வாழ்க ரான்ஸ்!” என்பவையாகும்.

காலம் மாறிவிட்டது என்பதற்கு அந்த வாழ்த்தொலிகள் மட்டுமே போதுமானவை. ன்பெல்லாம் மன்னனைக் கண்டால் “ வாழ்க ன்னன்!” “ வாழ்க லூயி!” என்று கூறுப ர்கள், இப்பொழுது “ வாழ்க தாயகம்!” ன்று தங்கள் நாட்டை முன்வைத்து வாழ்த் னார்கள். வாழ்த்தொலியில் ஏற்பட்ட மாறு ல்—அவர்கள் அறிந்தோ அறியாமலோ ப்படிச் செய்தனர். அவர்கள்தைத் தெளி ாக உணராவிட்டாலும், அப்பொழுது, மன் னன் மறக்கப்பட்டான், நாடு - நலி வுற்ற நாடு அவர்கள் மனக்கண்முன் நின்றது. அரச உரிமை மறுக்கப் பட்டது, மக்களுரிமை மதிக்கப்பட்டது.

மன்னன் நகர மண்டபத்தில் போய்இறங்கினான். முன்பெல்லாம் நகரத் தலைவர் ஒருவரை அரசன் பார்த்து நியமனம்செய்தான். அவ்வாறு நியமனம் செய்யப் பட்ட ஒரு நகரத் தலைவர் பாஸ்டில் வீழ்ந்த நாளன்று, பதவியை விட்டு—ஏன் உலகைவிட்டே விரட்டப்பட்டு விட்டார். பின் மக்கள் ஒன்றுகூடி, பெய்யி என்பவனை நகரத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் லூயி மன்னன் நகர மண்டபத்தின்முன் போய் நின்றதும், அந்த பெய்யி தான் அவனை வரவேற்கக் காத்திருந்தான். நகரத்தலைவனை நியமிக்கும் உரிமை — அதிகாரம் அரசனுடையது. பரம்பரை பரம்பரையாக இருந்துவந்த அரசகட்டளை. அது பாஸ்டில் விழுந்த அன்றே, விழுந்துவிட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இப்பொழுது மன்னனை வரவேற்கிறார். வேறு வழியில்லை, மன்னன் அந்த நகரசபைத் தலைவன் கொடுக்கும் வரவேற்பை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது.

இதற்குமுன் நாலாவது அன்ரி என்ற பிரெஞ்சு மன்னன், வெற்றிகள் பல கண்ட வீரன் தனது வலிமையால் பிரான்சை மட்டுமல்லாமல் ஐரோப்பாவையே ஆட்டிவைத்த அரசன், நகரமண்டபத்துக்கு வந்திருக்கிறான். மக்களால் வரவேற்கப்பட்டிருக்கிறான். அதே

போல் 16-வது லூயி மன்னனும் வருகிறான். ஆனால் இரண்டுக்குமிடையே இருந்த வேறுபாடு அப்பொழுது மன்னனின் அதிகாரம் உயர்ந்திருந்தது, மக்கள் பணிந்தனர், இப்பொழுதோ மக்கள் உரிமை உயர்ந்துவிட்டது, மன்னன் பணியும் நிலையில் இருக்கிறான்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரத்தலைவன் இந்தச் சூழ்நிலையை வெகு சூட்சுமமாகத் தெரிவித்தான். மன்னன் ஒரு நகரத்துக்குள் வரும்பொழுது, பொன்னாலான சாவிகளை மன்னன்முன் வைப்பது வழக்கம். அதாவது இந்த நகரத்துக்குள் நுழைய உங்களுக்கு உரிமை உண்டு, நீங்கள்தான் அதன் தலைவர் என்பதைக் குறிக்க. (பெட்டிச்சாவி வந்தால், அதிகாரம் மாறிவிட்டது என்று சொல்லப்படுகிறதல்லவா! அதைப்போல.) 16-வது லூயி வந்ததும், நகரத்தலைவர் பெய்யி தங்கச் சாவிகளை வெள்ளித் தட்டில் வைத்து "மேன்மை தங்கிய மன்னரின்முன், பாரிஸ் நகரத்தின் தங்கச் சாவிகளை வைக்கிறேன்! இதே வரவேற்புரையுடன்தான், உங்கள் முன்னோரான நாலாவது அன்ரியை இதே பாரிஸ் நகரமண்டபம் வரவேற்றது. அப்பொழுது அந்த மன்னர் மக்களை வென்றுவந்தார், ஆனால் இப்பொழுதுள்ள மக்கள் தங்கள் மன்னரை வென்றுவிட்டார்கள்!" என்று சொன்னார். மன்னனிடம் பேச—அதிலும் மன்னனின் பலவீனத்தை இடித்துக்காட்டிப் பேச நகரத்தலைவனுக்குத் துணிவு பிறந்தது. அவன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற காரணத்தால்.

லூயி மிக மெதுவான குரலில், பேசினான், அவன் பேசியதை நகரத்தலைவன் மீண்டும் எடுத்துச் சொன்னான். மக்கள் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மக்களை மகிழ்விக்குமாறோ, வேடிக்கையாகவோ, கம்பீரமாகவோ பேசும் ஆற்றல் லூயியினிடம் கிடையாது. ஆதலால் மிகத் தடுமாறியே அவனது பேச்சு இருந்தது.

பிரெஞ்சு அரசருடைய கொடி வெள்ளை நிறமானது. புரட்சியிலீடுபட்ட பாரிஸ் நகரக்கொடி நீலமும் சிகப்பும் கலந்த கொடி. லூயி பேசி முடிந்ததும், தன்னிடம் தரப்பட்ட இருவர்ண—நீலமும் சிகப்பும் கலந்த கொடியை தனது தொப்பியின்மீது அணிந்துகொண்டான். இதுவரைப் பேசாமலிருந்த மக்கள் "வாழ்க மன்னன்!" என்று முதல் தடவையாக வாழ்த்தினார்கள். நிலைமையைச் சமாளித்துக்கொண்டதாக லூயி மனமகிழ்ந்தான். அவனைச் சுற்றிலும் மக்கள் கூடி ஆரவாரித்தார்கள்.

பாரிஸ் நகர வரவேற்புகள் முடிந்ததும் மன்னன் வார்செயில் திரும்பினான். வெளித்தோற்றத்துக்கு வெற்றிகரமாகவும், களிப்பூட்டுவதாகவும் மன்னனின் ஊர்வலம் இருந்தபோதிலும், உள்ளூர லூயிக்கு சோகமும், வருத்தமும் அரித்துக்கொண்டிருந்தன. அரசனுடைய பதவி தாழ்ந்துவிட்டது என்பதை மிக விளக்கமாக அந்த வரவேற்பு வைபவங்கள் எடுத்துக்காட்டியது. வார்செயில் அரண்மனையில் வந்திறங்கியதும். அரசி எதிர்கொண்டழைத்தபொழுது, லூயி முகத்தில் புன்முறுவலைக் காணோம், அவனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது.

இதற்கப்புறம் நாட்டின் அதிகாரம் மன்னன் கையிலோ, பிரபுக்களிடமோ இல்லை. மக்களின் மனப்போக்குக்குப் பணிந்தே அவர்கள் நடக்க வேண்டியதாயிற்று. பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடப் பட்ட உரிமைகள், பட்டயங்கள், சாசனங்கள், அதிகாரங்கள் எல்லாம் நாள் கணக்கில், மணிக்கணக்கில் உதறித்தள்ளப் பட்டன. மக்களின் பிரதிநிதியாகக் கூடிய தேசிய அசெம்பிளி ஒரே நாளில் (1789 ஆகஸ்டு 4) கீழ்க்கண்ட சட்டங்களை நிறைவேற்றியது:

(1) நிலங்களில் ஆண்டான்-அடிமை முறை ஒழிப்பு.

(2) பிரபுக்களின் தனிப்பட்ட உரிமைகள் ஒழிப்பு.

(3) பிரபுக்களிடமிருந்து நீதி நிர்வாகத்தை வேறுபடுத்துவது.

(4) பிரபுக்களுக்கென்று தனியாக இருந்த வேட்டையாடும் உரிமைகள் ஒழிப்பு.

(5) நிலத்தில் வார உரிமைகள் ஒழிப்பு.

(6) எல்லோருக்கும் சரிசமமான வரிவிதிப்பு என்ற முறை.

(7) அரசாங்கத்திலும், இராணுவத்திலும் எல்லோருக்கும் பதவி வகிக்க சரிசமமான சந்தர்ப்பங்கள்.

(8) பதவிகளைப் பணத்துக்கு விற்கும் முறை நீக்கப்படுதல்.

(9) எல்லா ஊர்களுக்கும், மாகாணங்களுக்கும் ஒரேவிதமான உரிமைகள்.

(10) உபகாரப்பணம், பென்ஷன் போன்ற வீண் செலவுகள் நிறுத்தப்படுவது.

நாட்டின் அமைப்பை மாற்றியமைக்கும்

ட்டதிட்டங்களை அசெம்பிளி நிறைவேற்றிக் காண்டிருந்தது. அவற்றை எதிர்க்கும் க்தி பிரபுக்களுக்கோ, குருமார்களுக்கோ ல்லை. ஏற்றுக்கொள்ளவும் மனமில்லை. ப்படி இருக்கும்? அசெம்பிளி நிறைவேற்றும் திய சட்டதிட்டங்கள் அமுலாக்கப்பட்டதும், ரபு என்று எவனும் இருக்கமுடியாது. எல்லாரும் சாதாரண மனிதர்களாக ஆகவேண்டியதுதான். பிரெஞ்சு நாட்டுப் பிரபுக்களால் ந்த நிலையை நினைத்துப்பார்க்க முடியவில்லை. அசெம்பிளியின் சட்டதிட்டங்களை நரடியாக எதிர்த்து, அடக்கமுடியவில்லை, தலால் மறைமுகமாகத் தாக்கும் வேலையில் ரபுக்களும், குருமார்களும் ஈடுபட்டனர்.

பிரெஞ்சு நாடெங்கும், கலகங்களும், எதிர்க் லகங்களும் மூண்டன. பல இடங்களில் ரத் க்களரியும் ஏற்பட்டது. மக்களுக்கும் இரா ணுவத்தினருக்கும், பிரபுக்களுக்கும் குடியான ர்களுக்கும் சண்டைகள் நடந்தன. வியாபா ம் குறைந்தது, பொருள்கள் தட்டுப்பட்டன, தானியங்கள் முடக்கப்பட்டன. பஞ்சம் பரவி து, பராரிகள் துடித்தனர்.

பாரிஸ் நகரின்மீது பஞ்சம் வீசியது, பட்டினி டப்போரின் தொகை அதிகமானது. மாரிக் லத்துக் குளிர், அத்துடன் பட்டினியின் காடுமை. வேதனை தாங்காமல் மக்கள் வண்டனர். உணவு கேட்டு, மக்கள் கூக் ரலிட்டனர். அரண்மனைக்குத் தூதுக் ழுக்கள் அனுப்பப்பட்டன. உணவு வர ல்லை, ஆனால் பாரிஸ் நகருக்குள் மன்னனின் ட்டாளம் நுழைந்தது. வார்சேயில் அரண் னையைச் சுற்றியிருக்கும் போர்வீரர்களின் தாகை இரட்டிப்பாக்கப்பட்டது.

பசியால் மக்கள் துடித்தனர், வீதிகளில் ராணுவத்தினர் நடமாடும் சத்தம் கேட்டது.

ரொட்டிக்கடைகளுக்குமுன் நீண்டவரிசை ள். மழையையும், குளிரையும் தாங்கிக் காண்டு கிழவிகள், தாய்மார்கள், சிறுவர்கள் ஆவலுடன் நிற்கிறார்கள். கடை திறக்கிறது, ரொட்டி இல்லை " என்ற பலகையை எடுத் க் கடைக்காரன் மாட்டுகிறான். ஏமாற்றம்! வதனை! இனிமேல் எங்குபோவது என்று கைத்தபடி மக்கள் நிற்கின்றனர். காவல்புரி ம் இராணுவத்தினர் வந்து, கூட்டம் போடா ல் கலைந்துபோகும்படி எச்சரிக்கின்றனர். யங்கிக்கொண்டு, வேறு எங்கேயாவது ராட்டி கிடைக்குமா என்று சுற்றிப்பார்க்கக் ட்டம் கலைந்துபோகிறது.

உணவு எங்கேபோயிற்று? பலவித வதந்திகள் பாரிஸ் நகரில் உலவின. பிரபுக்கள் குருமார்கள் மன்னனுடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளார்களாம்; அதன்படி மெட்ஸ் என்ற இடத்தில் அறுபதினாயிரம் பேர் கொண்ட படை தயாராகிறதாம். லூயி மன்னனுக்கு ஆதரவாக அந்தப் படை கிளம்பிவந்து பாரிசை வளைத்துக்கொள்ளும், அதற்காக இப்பொழுது உணவை அங்கு சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இப்படி ஒரு வதந்தி. இராணுவத்திற்காக உணவு பதுக்கப்பட்டு விட்டது. இனி பாரிஸ் நகருக்குக் கிடைக்காது. இப்படி ஒரு முடிவான பேச்சு! எப்படியிருந்தாலும், ரொட்டிகிடைக்கவில்லை. வெறுங்கையுடன் தாய்மார்கள் வீடுதிரும்பினர், பட்டினியால் குழந்தை அலறியது, இந்த வேதனைக் காட்சியைக் காணமுடியாமல், கணவன் கிழிந்த தொப்பியை தலையில் போட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வெளிக்கிளம்புகிறான். வீதியில் காவல்புரியும் வீரர்கள் அணிவகுத்துப்போகின்றனர்.

மறுநாள் காலை வந்ததும், முதல் நாள் அடைந்த ஏமாற்றம் மறைந்துவிடும். இன்றைக்காவது ரொட்டி கிடைக்காதா என்ற எண்ணத்துடன் தாய்மார்கள் ரொட்டிப் பையுடன் கடைக்குப் போகின்றனர், வரிசையில் பொறுமையுடன் காத்திக்கின்றனர். ஒவ்வொருவர் கண்களிலும் ஒரேவித ஏக்கம்தான் " ரொட்டி! ரொட்டி!" கடை திறந்ததும், ஒரு சிலருக்கு ரொட்டி கிடைக்கிறது, பிறகு ரொட்டித்தட்டு காலியாகிவிட்டது. கடை மூடப்பட்டது. மற்றவர்கள் என்ன செய்வது?

வானம் கப்பியது, மக்களின் மனமும் கப்பியது. மழைபெய்தது தாய்மார்களின் கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது. ஒரு தாய் அழுதாள். " எப்படி நான் வீட்டுக்கு வெறுங் கையுடன் போவேன், பட்டினி கிடக்கும் இரண்டு வயதுக் குழந்தைக்கு என்ன சமாதானம் சொல்வேன்!" என்று. பலருக்கு அழ முடியவில்லை, வெறுங்கையுடன் வெறித்த பார்வையுடன் நின்றனர். இந்தச் சமயத்தில் அவர்களது வேதனைத் தீயில் எண்ணெய் விடுவதுபோன்று ஒரு செய்தி வந்தது.

" வார்செயில் அரண்மனையில் மிகப்பெரிய விருந்து நடந்ததாம். ரொட்டியும் வெண்ணையும் குவிந்துகிடந்ததாம், மது வழிந்ததாம், மாமிச உணவுகள் தேங்கிவிட்டதாம். இராணுவ அதிகாரிகள் ஆடினார்களாம், பிரபுக்களையும் அரசனையும் புகழ்ந்து பாட்டுக்கள் பாடினார்களாம். அது மட்டுமா, மக்களை இழித்துப் பேசினார்களாம். புரட்சியின் சின்ன

மான மூவர்ணக் கொடியைக் காலில் போட்டு மிதித்தார்களாம்! அரசனின் வெள்ளைக் கொடிக்கு வணக்கம் செய்து தொழுதார்களாம்!''

வார்செய்லிலிருந்து வந்தவர்கள் இந்தச் செய்தியைச் சொன்னார்கள். இங்கே பட்டினி! அங்கே விருந்து வைபவங்கள்! இங்கே வேதனை, அங்கு வேடிக்கைப் பேச்சுகள்! பாரிஸ் நகரத்தவர்கள் பதைபதைத்தனர், ஆத்திரத்துடன் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். ஆனால் தெருக்களில் கூட்டங் கூடுபவர்களை இராணுவவீரர்கள் கலைந்து போகும்படி செய்தனர்.

வரிசையில் நின்று; மழையில் நனைந்து, ரொட்டி கிடைக்காமல், கண்ணீரையும் மழை நீரையும் வழித்துக்கொண்டிருந்த தாய்மார்கள் கலைந்துபோகாமல் அப்படியே நின்றனர். இராணுவ வீரர்களுக்கு முன் கலைந்துபோய்க் கொண்டிருப்பவர்களைப் பார்த்ததும் அவர்களிடம் ஏளனம் உண்டாயிற்று. "சே! இந்த ஆண்கள் கோழைகள்!'' என்று ஒருத்தி முணுமுணுத்தாள். ஏதாவது செய்தாக வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு உண்டானது.

ஒரு பெண் ஓடிப்போய், பெரிய இராணுவ முரசை எடுத்துவந்து அடிக்க முற்பட்டாள். ரொட்டி கிடைக்காமல் தேம்பிக்கொண்டிருந்த தாய்மார்கள் எல்லோரும் அந்த முரசின் பின் வந்து நின்றார்கள். ஊர்வலம் — பட்டினிப் பட்டாளத்தின் ஊர்வலம் — குழந்தைகளின் சோர்ந்த முகத்தைக் காணச்சகியாத தாய்மார்களின் ஊர்வலம் புறப்பட்டது, அடக்கிவைத்திருந்த கோபம், ஆத்திரம் எல்லாம் ஆவேசமாகக் கிளம்பியது. ஒரேவிதமான குரல் "ரொட்டி! ரொட்டி!'' என்று மிகுந்த ஆத்திரத்துடன் வெளிவந்தது,

புதிய படை! தாய்மார்களின் ஊர்வலம்! காவல் காக்கும் இராணுவத்தினர் செய்வதறியாது திகைத்தனர்!

காலையின் கடும்பனி, தூறல் எதையும் தாய்மார்கள் லட்சியம் செய்யவில்லை! கோபத்துடன் அதட்டும் போர்வீரர்கள் கோரத்துடன் பளபளக்கும் துப்பாக்கிமுனைகள் தாய்மார்கள் துணிந்துவிட்டனர்! துப்பாக்கி முனைகள் கடுமையானது என்றால், பசியின் கொடுமை அதைவிடக் கடுமையானது!

முரசைக் கொட்டிக்கொண்டு முன்னால் ஒரு பெண் போனாள்! "ரொட்டி, ரொட்டி!'' என்ற குரலுடன் பின்னால் தாய்மார்கள் கிழவிகள், வெற்றுத் தட்டை ஏந்தியவண்ணம், ஒட்டிய கன்னத்தையுடைய குழந்தைகளைத் தாங்கிய வண்ணம்! கிழிந்த ஆடைகள், நனைந்த தலை மயிர், ஆனால் குரல் பலமாக இருந்தது!

வீதியில் செல்லும் ஊர்வலம்—பெண்கள் கொட்டும் போர்முரசு — வீட்டினுள்ளிருந்த பெண்களையும், வேலை செய்துகொண்டிருந்த பெண்களையும் ஈர்த்தது, பாத்திரத்தைத் துலக்கிக்கொண்டிருந்த பெண், பாதிவேலையில் அப்படியே ஓடிவந்தாள், துணி துவைத்துக்கொண்டிருந்த பெண் நனைந்த துணியைத் தலையில்போட்டுக்கொண்டு ஊர்வலத்தில் சேர்ந்துகொண்டாள். புகைபோக்கியைத் துடைத்துக்கொண்டிருந்த பெண், கூரையிலிருந்து கீழே குதித்து ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டாள். அவள் முகத்தில் கரிப்பூச்சு! ஆனால் அலங்கார வனிதையர் ஊர்வலமல்லவே! பட்டினிப் பட்டாளத்தின் ஊர்வலம்! பட்டினியின் கோலம் அதுதான்! குப்பை கூட்டிக்கொண்டிருந்த பெண், குப்பை கூட்டுவதை நிறுத்தி, மட்டையைத் தன் தோளில் சாத்திக்கொண்டு ஊர்வலத்தைத் தொடர்ந்தாள். அவளுக்குக் கிடைத்த போராயுதம் அது!

முரசு முழங்கிக்கொண்டேயிருந்தது! பட்டினியின் முழக்கம் அதிகமானது! விரைவில் பதினாயிரம் தாய்மார்கள் ஊர்வலத்தில் இருந்தனர், "ரொட்டி! ரொட்டி!'' என்ற குரல் நகரை அதிரச்செய்தது!

(தொடரும்)



வெஞ்சினம் உரைத்த வேந்தன்

[எழினி]

சோழநாட்டைச் சேர்ந்த தலையாலங்கானம் ன்னும் சிற்றூர்ப்பகுதி. சிற்றூர்தான் என் லும் அது போர்க்களமாக மாற்றப்பட்டிருக் றது. இரண்டு பக்கப் படைகளும் ஒன்றோ டான்று மோதுகின்றன. போர்முரசுகள் டியென முழங்குகின்றன. கொம்புகளும் க்காளங்களும் பேரோசைக் கிளப்புகின்றன. தாகள் நொறுங்கி மடமடவென சாயகின்றன. னைகள் கால்கள் அற்றுக், காதுகள் ற்றுத், தும்பிக்கையற்றுக் குருதிவழிய லையென வீழ்கின்றன. குதிரைகள் சின்னா ன்னமாகிக் கிடக்கின்றன. போர்வீரர்களின் ணங்கள் மலையெனக் குவிகின்றன. செங் ருதி ஆறெனஓடுகின்றது. எங்கணும் செந் ள் பறக்கிறது. கடும்போர். யாரொடு யார் ாரிடுகிறார்கள் என்று தெரியவில்லை; நருங்கிக் காணமுடியாத அளவுக்குக் கடும் ார் நடைபெறுகிறது.

போர்முழக்கம் ஓய்ந்து வாழ்த்தொலி ண்ணை முட்டும் அளவுக்குக் கேட்கிறது. ருகே நெருங்கினால் ஏழு மன்னர்கள் விலங் டப்பட்டுப் போர்வீரர்கள் புடைசூழ்ந்து ற்க, எதிரில் கட்டிளங் காளைப்பருவத்தின ன இளம் வேந்தன் வெற்றிக்களிப்போடு றுடன் நிற்கிறான். அவன் காலடியில் ஏழு ன்னர்களின் முடிகளும், அவர்களது போர் ரசங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. போர் ரர்களின வாழ்த்தொலிகளைச் செவிமடுக்கும் ாது, "வெற்றி வேந்தன் வாழ்க!", "வீரக் காமான் வாழ்க!", "பாண்டியன் நெடுஞ் சழியன் பல்லூழி வாழ்க!" என்ற ஒலிகள் வெளிகளில் விழுகின்றன :

ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ண்டுகளுக்குமுன்பு, தலையாலங்கானம் ன்ற இடத்தில் இப்படிப்பட்டவொரு காட்சி டைபெற்றிருக்கிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன் மிகச் சிறுவயதிலேயே பாண்டியநாட்டின் வேந்தனாக முடிசூட்டிக்கொண்டவன் ஆவான். அவன் ஆண்டில் இளைஞனை ஒழிய அறிவு, ஆற்றல், வீரத்தில் அவனை மிஞ்சுவார் யாரும் இல்லை என்னும்படி ஒருசிறிது நாட்களுக்குள் ஓங்குபுகழ் எய்தினான். படைக்கலப் பயிற்சியிலும், போர்புரியும் திறத்திலும் நாளுக்குநாள் தன்னைத் தானே திறமையாளனாக்கிக்கொண்டு வந்தான். அத்தோடு மட்டுமல்லாமல் கல்வியறிவிலும் மிகச்சிறந்து விளங்கினான். தமிழிடத்தும், தமிழ்ப்புலவர்களிடத்தும் நீங்காப் பற்றுக்கொண்டு அவர்களை அனபோடு ஆதரித்துவந்தான். அவனே ஒரு புலவனாகவும் திகழ்ந்தான். எப்பொழுதும் அவனைப் புடைசூழ்ந்து, புலவர்கள் பலர், இருந்துகொண்டே இருந்தனர். மாங்குடி மருதனார் என்ற புலவர் பெருந்தகையாளரைப் புலவர் கூட்டத்திற்குத் தலைவராக்கி, ஒரு பெரும்புலவர் குழுவினைத் தன் அரசில் வைத்துக் காப்பாற்றிவந்தான். இவர்களைத் தவிர வேறு பல புலவர்களும், பாணர்களும், கூத்தர்களும் அவனிடம் வந்து வந்து பரிசில்கள் பெற்று, அவனை வாழ்த்தி விட்டுச் சென்றுகொண்டேயிருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியனின் கல்வி பற்றிய புகழும், வீரம்பற்றிய புகழும் பாண்டிய மண்டலம் மட்டுமல்லாமல், சேர, சோழ மண்டலங்களிலும், பிறநாடுகளிலும் பரவத்தொடங்கின.

பாண்டியன் நெடுஞ்செழியன், வேள் எவ்வி என்பானது மிழலைக்கூற்றம் என்ற பகுதியின் மீதும், பழைய வேளிருடைய முத்தூற்றுக் கூற்றம் என்ற பகுதியின்மீதும் படையெடுத்து. மாறாமல் தொடுத்து வெற்றிபெற்று, அந்தப் பகுதிகளைத் தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான். இவ்விடங்களில் பாண்டியன் போரிட்ட போர்த்திறனைப் பற்றிய செய்தி எங்கும் பரவிற்று. "பாண்

டியன் நெடுஞ்செழியனை வெல்லுவார் இவ் வவனியில் யாரும் இல்லை'' என்ற கூற்று எல்லோருடைய வாயினின்றும் வெளிவந்தது.

"பாண்டியன் நெடுஞ்செழியனை யாராலும் வெல்லமுடியாதாமே!'' என்ற செய்தி சேர—சோழ நாட்டு வீரர்களிடையேயும், மன்னர்களிடையேயும் பரவிற்று. சேர, சோழ மன்னர்களும் வேறு பல சிற்றரசர்களும் பாண்டியன் நெடுஞ்செழியனின் புகழ்கண்டு பொறுமைப்பட்டு, அவனை எதிர்த்தழிக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

சேரனிடத்திலோ அல்லது சோழனிடத்திலோ பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரம் பற்றி யாராவது ஏதாவது கூறினால், உடனே அவர்கள் "பாண்டியனா! அவன் மிகச் சிறிய பொடிப்பயல்; அவனை அரைநொடியில் முறித்துவிடுவோம்! எம்மிடத்தில்தான் நால்வகைப் படைகள் இருக்கின்றனவே!'' என்னும் கருத்துப்படக் கூறினார்கள். சேர, சோழ மன்னர்களும் பிற அரசர்களும் பாண்டியன் மீது பொறாமைகொண்டு அவனை இழித்தும் பழித்தும் கூறும் சொற்களை, ஒற்றர்கள் அவ்வப்போது பாண்டியன் நெடுஞ்செழியனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். பாண்டியன் முதலில் அத்தகைய இழிச்சொற்களைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தான். பகைவர்களின் இழித்தலும் பழித்தலும் மிகவாகவே, "எல்லா மன்னர்களும் ஒன்றுசேர்ந்து வந்தாலும், அவர்கள் அத்தனைப்பேரையும் போரிலே புறங்காட்டி ஓடச்செய்வேன்'' என்று ஆத்திரம் பொங்கக் கூறினான்.

பாண்டியன் ஆத்திரப்பட்டுக் கூறிய மொழியை ஒற்றர்மூலம் கேட்டறிந்த சேர சோழ மன்னர்கள் பாண்டியனை எப்படியும் முறியடித்துத் தீரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். சேர சோழ மன்னர்களோடு திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் என்ற ஐந்து சிற்றரசர்களும் சேர்ந்துகொண்டார்கள். எல்லோரும் சோழனுடைய தலைநகரில் கூடிப் பாண்டியனை எதிர்க்கும் வகைபற்றித் திட்டம் தீட்டினார்கள். எழுவருடைய படைகளும் சோழன் தலைநகரில் ஒன்றுகூடின.

இருபெருவேந்தரும் ஐந்துவேளிரும் தன்னை எதிர்க்கப் படைகள் திரட்டுகிறார்கள் என்பதைக் கேள்வியுற்றுப் பாண்டியன் நெடுஞ்செழியன் தனனுடைய பெரும்படையைத் திரட்டி அணிவகுத்து நிறுத்தினான். பாண்டியன் அணிவகுத்து நின்ற படைவீரர்களுக்கு முன்னால் வீறுடன் நின்று வெஞ்சின மொழிகள் சில சொல்லத்தொடங்கினான். அமைச்சர்களும், புலவர்களும், படைத்தலைவரும், போர் வீரர்களும் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்று கேட்டனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் வீரமுழக்கமிட்டுக் கூறினான்: "படைமறவரே! நம்முடைய நாட்டின் சிறப்பைப்பற்றி யாரேனும் புகழ்ந்து கூறினால் அவர்கள் சிரிக்கத்தக்கவர்களாம்! நான் எதிர்த்துப் போரிடமுடியாத அளவுக்கு மிக்க இளைஞனாம்! நான் வெறுப்புக்கொள்ளும்படி இப்படிக் கூறியிருக்கிறார்கள் நம்முடைய பகை வேந்தர்கள்! மாறிமாறி ஒலிக்கும் மணிகள் கட்டினதும் பரந்த காலினையுடையதுமான யானைகளையும், தேர்களையும், குதிரைகளையும், படைக்கலத் தொழிலிற் சிறந்த மறவர்களையுந் தாங்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறார்களாம்! எனது வலிமைக்கு அவர்கள் சிறிதும் அஞ்சினதாகத் தெரியவில்லை! அத்தோடு மட்டுமல்லாமல் அவர்கள் என்னை அழித்தொழிக்க வேண்டும் என்று சினங்கொண்டு இழிசொற்கள் பலவற்றையும் கூறியுள்ளார்களாம்! நான் இதுவரையில் பொறுத்துப் பார்த்தேன்! இனிப பொறுக்க முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டேன்! பெரும் போரின்கண்ணே அவர்களை எதிர்த்து நின்று அவர்களைச் சிதறடிப்பது என்று முடிவு செய்துவிட்டேன்! அவர்களைப் போரில் சிதறடித்து, முரசங்களோடு அவர்களைச் சிறைப்பிடிக்காது நான் போவேனாயின், என்னுடைய குடை நிழலின்கண்ணே வாழும் குடிமக்கள் தாங்கள் சென்று தங்குவதற்கு ஏற்ற நிழலைக் காணமல், 'எம்முடைய வேந்தன் கொடுமையாளன் ஆகிவிட்டான்' என்று கண்ணீர் சிந்தி என்மீது பழிதூற்றக்கூடிய அளவுக்கு நான் ஒரு கொடுங்கோலனாவேனாக! உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய புலவர் பெருந்தகை மாங்குடி மருதனார் உள்ளிட்டு, உலகத்தில் நிலைத்த புகழோடு வாழும் புலவர்கள் பலரும் என்னையும் என் அரசினையும்பற்றிப் புகழ்ந்து பாடாது என் எல்லையை விட்டு நீங்கிப்போவார்களாக! என்னால் இதுவரையில் காப்பாற்றப்பட்டு வரும் உறவினர்கள் துன்பம்மிக அடையவும், இரப்பவர்க்கு ஒன்றும் கொடுக்க முடியாத அளவுக்கு நான் வரவும் ஆன நிலையை நான் அடைவேனாக!'' பாண்டியன் கூறிய வெஞ்சின மொழியை அவனே தொகுத்துச் செய்யுள்வடிவில் தரும் பாங்கினை இதோ காண்க:

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்நிழற் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே.

—புறநானூறு-72.

[பொழிப்புரை : நம்மாற் சிரிக்கத்தக்கார் இவன் ஆளும் நாட்டை மிகுத்துச் சொல்லுவர் எனவும், இவன்தான் இளையன் எனவும், யான் வெறுப்பச்சொல்லி, ஒலிக்கும் மணி இருமருங்கும் ஒன்றோடொன்று மாறியிசைக்கும் பரந்த அடியினையும் பெரிய காலினையுமுடைய உயர்ந்த நல்ல யானையினையும், தேரையும், குதிரையையும், படைக்கலத் தொழிலமைந்த வீரரையும் உடையேம் யாம் என்று. எனது மிக்க வலிக்கு அஞ்சாது, மாறு படுஞ்சினம் பொருந்திய அரசரை, பொருதற்கரிய போரின் கண்ணே சிதறப்பொருது, முரசத்தோடு கூட அவரைக் கைக்கொண்டிலேனாயின். பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வார். தாங்கள் சென்றடையும் நிழற்காணாது, கொடியன் எம்முடைய வேந்தனென்று கருதி, கண்ணீரைப் பரப்பிக் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலை யுடையேனாகுக. உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய மாங்குடி மருதன் முதல்வனாக. உலகத்தோடு நிலைபெற்ற. பலரும் புகழும் தலைமையையுடைய புலவர், பாடாது நீங்குக எனது நில வெல்லையை. என்னாற் புரங்கப்படும் கேளிர் துயரம் மிக, இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யான் அடைவேனாக.

நகுதக்கனர் - நகைக்கத்தக்கவர்; மீக்கூறுநர் - மேன்மையாகப் புகழ்ந்து கூறுகின்றவர்; உளைய - வருந்த, உறுதுப்பு - மிக்க வலிமை; புன்கண்கூர - துன்பம் மிக.]

இப்படியாக வெஞ்சினமொழி கூறியவுடன் போர்வீரர்களை ஒருமுறை சுற்றிப்பார்க்கிறான். போர்வீரர்கள் எல்லோரும் "போர்! போர்!! இனிப் போர்தான்!!!" என்று முழக்கமிடுகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் தலைமையில் பெரும்படை சோழன் தலைநகரை நோக்கிப் புறப்பட்டது. பாண்டியன் படை கிளம்பி வருகிறது என்று கேள்வியுற்றவுடன் ஏழு அரசர்களும் தம் படைகளைக் கூட்டாகத் திரட்டிக்கொண்டு பாண்டியனை எதிர்நோக்கிச் சென்றனர். இருதரப்பினரும் தலையாலங் கானம் என்ற இடத்தில் மோதிக்கொண்டனர். கடும்போர் நடந்தது. போரில் பாண்டியன் வென்றான். ஏழு மன்னர்களையும் சிறைப் பிடித்து விலங்கிட்டுத் தன்முன்னே கொண்டு வந்து நிறுத்தும்படி போர்வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் ஏழு மன்னர்களின் முரசங்களையும், முடிகளையும் பற்றிக் கொண்டு அவர்களையும் கட்டி யிழுத்துக் கொண்டுவந்து அவன் முன்னே நிறுத்தினார்கள். தன் வெஞ்சின மொழிகள் நிறைவேறி விட்டதுகண்டு பாண்டியன் வீரச்சிரிப்பு சிரித்து வெற்றிக்களிப்பு கொண்டான்.

அதுமுதல் பாண்டியன் நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் என்று அடைமொழி கொடுத்து அழைக்கப்பட்டான். அவனது வீரம் யாருக்கும் தலைவணங்காததாக இருந்தது; அவனது புகழ் என்றும் விளங்கக்கூடிய நிலைத்த புகழாயிற்று.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் தன் குடிமக்கள் பழிதூற்றாதவாறு செங்கோல் ஆட்சி புரிய வேண்டும் என்பதிலே கண்ணுங் கருத்துமாக இருந்தான் என்பதும், புலவர்கள் தன் உடன் இருந்து தன்னையும் தன் நாட்டையும் பாடுவதை ஒரு பெருமையாகவும், அவர்கள் தன்னைவிட்டு அகலுவதை ஒரு இழுக்காகவும் கருதினான் என்பதும், உறவினர்களும், இரப்பவர்களும் துன்பம் அடையாமல் தன்னால் காப்பாற்றப்படவேண்டும் என்பதிலே கருத்தாக இருந்தான் என்பதும் அவனது கூற்றிலிருந்து தெரியவருகின்றன.

இப்படிப்பட்ட வேந்தர்களைக் கொண்டிருந்த தமிழகம், அதே சீரில் வளர்ந்துவராமல், ஏனோ தாழ்ந்தது என்று எண்ணும்போது ஏக்கமும் துக்கமும் நெஞ்சைப் பற்றுகின்றன!

கையற்ற கிரேக்க ஓவியன்

இருபத்திநான்கு வயதுடைய கிரிசுட்டோ சொபாகிளீசு (Christo Sophocles) என்ற இரண்டு கையுமற்ற கிரேக்க நாட்டு ஓவிய வல்லுநன் இப்பொழுது உலகப்புகழ் பெற்றுவருகிறான். அவனுடைய ஓவியக் கண்காட்சியைக் கண்டுகளிக்கவேண்டி, அவன், அவனது படங்களோடு சுவிட்சர்லாந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறான். இதற்குமுன் அவனது படங்கள் கிரீட் என்ற இடத்திலும், ஏதென்சு நகரத்திலும் கண்காட்சியாகக் காண்பிக்கப்பட்டபொழுது, அவை அவனுக்குப் பெயரையும் புகழையும் ஈட்டித் தந்தன.

கிரிசுட்டோ சொபாக்கிளீசு 12 வயதுடையவனாக இருக்கும்போது, செர்மனி குண்டுவீச்சு ஏதென்சு நகரிலுள்ள அவனது வீட்டைத் தாக்கிற்று. அதனால் அவன் தன் இரு கைகளையும் ஒரு கண்ணையும் இழந்தான். முழங்கைகளை இழந்த நிலையில் இரண்டு தோள்பகுதிக் கைகளுக்கிடையில் எழுதுகோலை வைத்து நாளடைவில் எழுதக் கற்றுக்கொண்டான். மற்றவர்களைப் போலவே விரைவாகவும் தெளிவாகவும் எழுதப் பழகிக்கொண்டான்.

அவன் 19 வயதுடையவனாக இருக்கும்போது ஓவியப் பள்ளியில் சேர்ந்து ஓவியங்கள் வரையக் கற்றுக்கொண்டான். ஓரிரு ஆண்டுகளில் அவன் கிரேக்க நாடு முழுவதும் சுற்றித் தன் ஓவியங்களைப் பலருக்கும் காட்டினான். ஓவிய வல்லுநர்களெல்லாம் கிரிசுட்டோவின் படங்கள் எல்லாவகையிலும் மிகச்சிறந்து விளங்குகின்றன என்று பாராட்டுரை வழங்கினர்.

இரண்டு கையும் ஒரு கண்ணுமற்ற கிரிசுட்டோ எதிர்காலத்தில் மிகச்சிறந்த உலக ஓவியனாக விளங்குவான் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.



(26)

குபேரன்

தேவர்களில் மிகச் செல்வவானுகக் கருதப் டுபவன் குபேரன். இவன் அட்டதிக்குப் லகர்களில் ஒருவன் அளகாபுரிக்குத் தலை ன். இவ்வளவு உயர்ந்த பதவியை யடைய வன் செய்த அருமையான காரணங்களைக் வனிக்கலாம். இவனது கதை, காசி காண் ம் என்ற புராணத்தில் பதின்மூன்ருவது த்தியாயத்திற் சொல்லப்பட்டுள்ளது.

காம்பிலி என்ற நகரில் வேள்விதத்தன் ன்ற பழைமையாகிய வேதியர் ஒருவர் இருந் ாராம். அவர் அருமையான யாகங்களைச் சய்தவர் நான்கு வேதங்களையும் கரைத்துக் டித்தவர். சாஸ்திர சம்பிரதாயங்களில் றப்பட்டபடி, ஆசார சீலராக இருந்தவர். வர் சிறந்த தவத்தினராக ஆனபொழுது, ரு அழகிய பெண்ணைத் தேடி மணந்து காண்டார். வேள்விகளில் ஈடுபட்டிருக்கும் வதியருக்கு அழகு நிறை மனைவி எதற் ன்று கேட்கலாம், பிரமசாரியத்துக்கு டுத்தபடி கிருகஸ்தர் என்ற நிலையை ஒவ் வாரு பிராமணனும் அடையவேண்டு மன்று கூறப்படுவதால், அந்தத் திருமணத் தச் செய்துகொண்டார்.

திருமணம் செய்துகொண்டதும், தனது வள்வி நியமங்களை மறந்து, அந்தப் பெண் ணிடம் வேள்விதத்தன் அடிமைப்பட்டுவிட ல்லை. அவர் சிறந்த வேதோத்தமராக ருந்ததால், காமம் முதலான மூன்று ஆசை ளையும் அறவே ஒழித்துவிட்டிருந்தார். ருந்தாலும், அதிகநாள் செய்திருந்த தவங் ளின் அருமையால், அவருடைய மனைவி ரு மகனைப் பெற்றெடுத்தாளாம். மகனுக்குக் ணநிதி என்று பெயரிட்டு, வளர்த்தனர். ரியகாலத்தில், அவனுக்கு நான்கு வேதங் களையும், இருபத்தெட்டு சிவாகமங்களையும் வேள்விதத்தன் சொல்லிக்கொடுத்தார். அவற்றையெல்லாம் கற்று, குணநிதி சிறந்த பிராமணனுக வளர்ந்தான்.

இவ்வாறிருக்கையில், சூத்திரங்களையும், சுலோகங்களையும் ஒப்பித்துக்கொண்டிருந்த குணநிதியின் கவனம் சூதாட்டத்தின்மீது சென்றது. தந்தைக்குத் தெரியாமல், அவன் சூதாடும் இடங்களுக்குச் சென்ருன், தீது பயப்பவர்களுடன் பழகினன். காலையில் சபமாலை உருட்டவேண்டிய சமயத்தில், அவன் கையில் சொக்கட்டான் காய்கள் உருண்டன, மாலையில் சந்தியாவந்தனம் செய்வதாக வெளிச்சென்றவன் சதுரங்கம் ஆடப் போவான். சூதாட்டமென்ருல், அதற்கு நிறையப் பொருள் வேண்டுமே! எனவே சூதுடன் களவும் சேர்ந்தது! வீட்டிலிருந்த பொருள்கள் ஒவ்வொன்ருகத் திடீரென்று மறையத்தொடங்கின. சூதாட்டத்தில் அவை குணநிதியின் கையிலிருந்து மாறின.

சூதாட்டத்தில் அவனுடன் பழகும் 'அரிய' நண்பர்கள் கட்குடியையும், காமவேட்கையையும் பழகிக்கொடுத்தனர். கனிகையர் வீடுகளில், குணநிதி விழுந்துகிடந்தான், காய்கள் உருண்டுவிழுந்தன. வேள்விதத்தன் வீட்டிலிருந்த பொருள்கள்—விலையுயர்ந்த பொருள்கள் வேகமாக மறைந்துகொண்டிருந்தன.

வேள்விதத்தன், வேத வேதாந்த விசாரத்தில் மூழ்கியிருப்பவர், அவருக்கு மகனின் நடத்தைபற்றித் தெரியாது. ஊரார் பழித்ததும், இழித்ததும் அவர் காதில் விழவில்லை. ஆனல் குணநிதியின் தாய்க்கு மகனின் நடத்தைகள் தெரியவந்தன. அவளால் கண்டித்து ஒழுங்குபடுத்த முடியவில்லை, கணவனிடம் சொல்லவும் அவளுக்குப் பயமாகயிருந்தது.

த்தன் தன்னைத்தானே சமாதானம் செய்து காண்டார். ஆனாலும் மோதிரம் கைமாறி ருக்கிறது! அஃதெப்படி? இவன் திருடி ருக்கவேண்டும். பார்வைக்கு அவனும் ருடனைப்போலத்தான் இருக்கிறான். வேள்வி த்தன் இவ்வாறு யோசித்துக்கொண்டிருக் கையில், முரடன் வெகுதூரம் நடந்துபோய் ட்டான்.

'திருடன்' 'திருடன்' என்று கூவிக்கொண்டு வள்வி தத்தன் முரடனை நோக்கி ஓடினார். தருவில் நடமாடுபவர்களும் அவருடன் ஓடி, ரடனைப் பிடித்துக்கொண்டார்கள். முரட ுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் என்னை இப்படிச் சூழ்ந்துகொண்டீர் ள்?"

"இந்த மோதிரம் என்னுடையது நீ திரு க்கொண்டாய்! பேசாமல் கொடுத்தால், தப்பினாய்; இல்லையேல் அரசதண்டனைக்கு— ல்ல பிராமணனின் பொருளைத் திருடியதற் த் தரக்கூடிய கடுமையான தண்டனை உனக் க் கிடைக்கும். திருடிய கரத்தை வெட்டி டுவார்கள்!" என்று வேள்விதத்தன் அறி றுத்தினார்.

குணநிதியின் தந்தை அவர் என்பதை ரடன் கண்டுகொண்டான். நிலைமை ஓரள வுக்குப் புரிந்தது. அவருடைய மோதிரத் தைக் குணநிதி திருடிக்கொண்டு வந்திருக்க வண்டும். தான் அணிந்திருப்பதைப் பார்த் தும் தன்னைத் திருடன் என்று வேள்வி த்தன் நினைக்கிறார்!

முரடன் சிரித்து "வேதவிசாரணைகளில் தர்ச்சியுள்ளவரே! நடந்ததை நன்றாக அறிந்துகொண்டு, பின் என்மீது குற்றஞ் ட்ட வாருங்கள்! இந்த மோதிரத்தை நான் ருடவில்லை, சூதாட்டத்தில் எனக்குக் டைத்தது! முதல்நாள் விளையாடுகையில் னது மேலாடையொன்றை குணநிதி கெலித் துச்சென்றான். நேற்று இரவு மீண்டும் வந்து ளையாடுகையில் இந்த மோதிரத்தை அவன் தாற்றுவிட்டான்!"

வேள்விதத்தன் திடுக்கிட்டான். "குண தியா? இந்த மோதிரத்தைத் வைத்துச் தாடினான?"

முரடன் அவரைச் சமாதானப்படுத்தி, இந்தமோதிரத்தை மட்டுமல்ல, விலையுயர்ந்த ணிகள், பீதாம்பரங்கள் இவற்றை நாள் தோறும் அவன் சூதாட்டத்தில் தோற்றுக் காண்டேயிருக்கிறான்" என்று சொன்னான்.

வேள்விதத்தனால் நம்பமுடியவில்லை. "இருக் கவே இருக்காது! அவன் நாள்முழுவதும் வேதபாராயணம் செய்வதில் ஈடுபட்டிருக்கி றான்! குணநிதி சூதாட வந்திருக்கமாட் டான்."

முரடனுக்குச் சிரிப்பு வந்தது. "நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். ஊரிலுள்ளவர் களைக் கேட்டுப்பாருங்கள். அவனைப்போன்ற சூதாடி இல்லையென்று ஒருமித்துக் கூறுவார் கள். சூதாட்டத்தில் பெரிய குருவாக உமது மகன் இருக்கிறான்."

வேள்விதத்தன் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்த்தார். முரடன் சொல்வதை அவர்கள் ஆமோதித்தனர்.

"சூதாட்டத்தில் மட்டுமென்ன' குடிப்பதி லும் அவனுக்கு இணை யாரும் கிடையாது.',

"கணிகையர் தெருவில் அவனைக் காணாத இடம் இருக்கமுடியாது!"

வேள்விதத்தனால் அங்கு நிற்க முடிய வில்லை. தாழ்ந்த தலையுடன் வீடு திரும்பினார். வேதாப்பியாசம் செய்வதற்கு வேதபாடசாலை போவதாகக் கிளம்புபவன், வேசியர் வீடுகளில் போய் சூதாப்பியாசமும், காமாப்பியாசமும் செய்துகொண்டிருக்கிறான்! வேள்விதத்தன் மனமொடிந்தார்.

வீட்டினுள் நுழைந்ததும், வேள்விதத்தன் தனது மனைவியை அழைத்துக் கேட்டார். "எங்கே குணநிதி?"

என்றுமில்லாமல், இன்று மகனைப்பற்றிக் கேட்கிறாரே யென்று அவள் சற்று பயந்தாள். குணநிதி எங்குபோயிருக்கிறானென்று அவ ளுக்குத் தெரியாது. இருந்தாலும் கேட்டதற் குப் பதிலாக "அவன் குளத்துக்குப் போயி ருக்கிறான், நீராட" என்று சொல்லிவைத் தாள்.

மனைவி சொல்லுவது மெய்யென்றுதெரிந் தது. "அதுபோகட்டும்! நமது கல்யாணத் தின்போது உனக்கு நான் இட்ட மோதி ரத்தை இப்பொழுது தா!" என்று வேள்வி தத்தன் கேட்டார். அவள் கையைப் பார்த் தாள். மோதிரமில்லை! மோதிரம் காணமற் போனது அவளுக்கும் அப்பொழுதுதான் தெரிந்தது. எப்படிப் போயிருக்கும்? யோசிக்க வேண்டியதில்லை. மகன்தான் திருடிக்கொண்டு போயிருப்பான்! தனது திகைப்பைச் சமாளித் துக்கொண்டு, "மோதிரத்தைப் பற்றியா கேட் கிறீர்கள்! பத்திரமாக இருக்கட்டுமென்று

தத்தன் தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டார். ஆனாலும் மோதிரம் கைமாறியிருக்கிறது! அஃதெப்படி? இவன் திருடியிருக்கவேண்டும். பார்வைக்கு அவனும் திருடனைப்போலத்தான் இருக்கிறான். வேள்விதத்தன் இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில், முரடன் வெகுதூரம் நடந்துபோய்விட்டான்.

'திருடன்' 'திருடன்' என்று கூவிக்கொண்டு வேள்வி தத்தன் முரடனை நோக்கி ஓடினார். தெருவில் நடமாடுபவர்களும் அவருடன் ஓடி, முரடனைப் பிடித்துக்கொண்டார்கள். முரடனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் என்னை இப்படிச் சூழ்ந்துகொண்டீர்கள்?"

"இந்த மோதிரம் என்னுடையது நீ திருடிக்கொண்டாய்! பேசாமல் கொடுத்தால், தப்பினாய்; இல்லையேல் அரசதண்டனைக்கு—நல்ல பிராமணனின் பொருளைத் திருடியதற்குத் தரக்கூடிய கடுமையான தண்டனை உனக்குக் கிடைக்கும். திருடிய கரத்தை வெட்டிவிடுவார்கள்!" என்று வேள்விதத்தன் அறிவுறுத்தினார்.

குணநிதியின் தந்தை அவர் என்பதை முரடன் கண்டுகொண்டான். நிலைமை ஓரளவுக்குப் புரிந்தது. அவருடைய மோதிரத்தைக் குணநிதி திருடிக்கொண்டு வந்திருக்கவேண்டும். தான் அணிந்திருப்பதைப் பார்த்ததும் தன்னைத் திருடன் என்று வேள்வி தத்தன் நினைக்கிறார்!

முரடன் சிரித்து "வேதவிசாரணைகளில் தேர்ச்சியுள்ளவரே! நடந்ததை நன்றாக அறிந்துகொண்டு, பின் என்மீது குற்றஞ்சாட்ட வாருங்கள்! இந்த மோதிரத்தை நான் திருடவில்லை, சூதாட்டத்தில் எனக்குக் கிடைத்தது! முதல்நாள் விளையாடுகையில் எனது மேலாடையொன்றை குணநிதி கெலித்துச்சென்றான். நேற்று இரவு மீண்டும் வந்து விளையாடுகையில் இந்த மோதிரத்தை அவன் தோற்றுவிட்டான்!"

வேள்விதத்தன் திடுக்கிட்டான். "குணநிதியா? இந்த மோதிரத்தை வைத்துச் சூதாடினான்?"

முரடன் அவரைச் சமாதானப்படுத்தி, இந்தமோதிரத்தை மட்டுமல்ல, விலையுயர்ந்த அணிகள், பீதாம்பரங்கள் இவற்றை நாள்தோறும் அவன் சூதாட்டத்தில் தோற்றுக்கொண்டேயிருக்கிறான்" என்று சொன்னான்.

வேள்விதத்தனால் நம்பமுடியவில்லை. "இருக்கவே இருக்காது! அவன் நாள்முழுவதும் வேதபாராயணம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறான்! குணநிதி சூதாட வந்திருக்கமாட்டான்."

முரடனுக்குச் சிரிப்பு வந்தது. "நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். ஊரிலுள்ளவர்களைக் கேட்டுப்பாருங்கள். அவனைப்போன்ற சூதாடி இல்லையென்று ஒருமித்துக் கூறுவார்கள். சூதாட்டத்தில் பெரிய குருவாக உமது மகன் இருக்கிறான்."

வேள்விதத்தன் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்த்தார். முரடன் சொல்வதை அவர்கள் ஆமோதித்தனர்.

"சூதாட்டத்தில் மட்டுமென்ன' குடிப்பதிலும் அவனுக்கு இணை யாரும் கிடையாது.',

"கணிகையர் தெருவில் அவனைக் காணாத இடம் இருக்கமுடியாது!"

வேள்விதத்தனால் அங்கு நிற்க முடியவில்லை. தாழ்ந்த தலையுடன் வீடு திரும்பினார். வேதாப்பியாசம் செய்வதற்கு வேதபாடசாலை போவதாகக் கிளம்புபவன், வேசியர் வீடுகளில் போய் சூதாப்பியாசமும், காமாப்பியாசமும் செய்துகொண்டிருக்கிறான்! வேள்விதத்தன் மனமொடிந்தார்.

வீட்டினுள் நுழைந்ததும், வேள்விதத்தன் தனது மனைவியை அழைத்துக் கேட்டார். "எங்கே குணநிதி?"

என்றுமில்லாமல், இன்று மகனைப்பற்றிக் கேட்கிறாரே யென்று அவள் சற்று பயந்தாள். குணநிதி எங்குபோயிருக்கிறானென்று அவளுக்குத் தெரியாது. இருந்தாலும் கேட்டதற்குப் பதிலாக "அவன் குளத்துக்குப் போயிருக்கிறான், நீராட" என்று சொல்லிவைத்தாள்.

மனைவி சொல்லுவது மெய்யென்றுதெரிந்தது. "அதுபோகட்டும்! நமது கல்யாணத்தின்போது உனக்கு நான் இட்ட மோதிரத்தை இப்பொழுது தா!" என்று வேள்வி தத்தன் கேட்டார். அவள் கையைப் பார்த்தாள். மோதிரமில்லை! மோதிரம் காணாமற்போனது அவளுக்கும் அப்பொழுதுதான் தெரிந்தது. எப்படிப் போயிருக்கும்? யோசிக்க வேண்டியதில்லை. மகன்தான் திருடிக்கொண்டு போயிருப்பான்! தனது திகைப்பைச் சமாளித்துக்கொண்டு, "மோதிரத்தைப் பற்றியா கேட்கிறீர்கள்! பத்திரமாக இருக்கட்டுமென்று

உள்ளே வைத்திருக்கிறேன். உச்சிப்பொழுதாகிவிட்டது, நீங்கள் சாப்பிட வாருங்கள்! நீங்கள் சாப்பிட்டபிறகு நான் மோதிரத்தை எடுத்துவருகிறேன்!" என்றாள்.

மகன் திருடுகிறான், சூதாடுகிறான், காம மது மோகங்களில் ஈடுபடுகிறான்! இங்கு மனைவி பொய்சொல்லுகிறாள்! இவர்களுடன் தான் எப்படி இருக்கமுடியும் என்று வேள்விதத்தன் யோசித்தார்.

"நீதியிலிருந்து தவறி, தான் பிறந்த குலத்துக்குத் தகுந்த ஆசாரங்களை விட்டு, தகாத முறையில் ஒரு பிள்ளை இருப்பதைவிட, பிள்ளையில்லாமலே காலந்தள்ளுவது நல்லது! குலத்துக்கு அபகீர்த்தி வரும்வகையில் ஒருவன் இருந்தால், அவனை விலக்கிவிட்டு வாழ்வது குலத்தினுடைய கீர்த்தியைக் காப்பாற்றுவதாகும்!" இப்படியெல்லாம் வேதசாஸ்திரங்கள் கூறுவது, வேள்விதத்தனுக்கு நினைவு வந்தது. தனக்கு எதிரே நிற்கிற மனைவியை—அரும்பையொத்த முலையையும், பவளம்போன்ற அதரத்தையும் உடைய மனைவி, "முகிழ்முலைத் துவர் வாய்" என்று புராணக்காரர் வர்ணிக்கிறார், அத்தகைய மனைவியை விட்டு, வேள்விதத்தன் நீங்கி, வேறொரு பெண்ணை—பொன்னாலான ஆபரணமணிந்த தனங்களையுடைய அழகிய பெண்ணை—மணந்துகொண்டார். மகனுக்காகப் பரிந்துகொண்டு மனைவி பொய் சொன்னாள் என்பதைக் கண்டதும், "சே! இந்த இல்லற வாழ்வே வேணடாம்!" என்று அந்த வேதபிராமணர் நீங்கியிருக்கலாம். இவள் வேண்டாம் என்று "பொன்னின் வார்முலைப் பூவையைக்" கடிமணம் புரிந்துகொண்டார்.

தான் செய்த குற்றத்தால், தாயை விலக்கிவிட்டுத் தந்தை போய்விட்டார் என்பது குணநிதிக்குத் தெரிந்தது. கலங்கிநிற்கும் தாயைப் பார்க்கும்பொழுது, முன்பு தான் செய்த தவறுகளை நினைத்து குணநிதி மிகவும் வருந்தினான். "வேதாகமங்களை நான்முறையாகக் கற்கவில்லை. பொருள் தேடும் வகைகளையும் நான் பெறவில்லை! இனி நான் எப்படி வாழமுடியும்?" என்று குணநிதி மனம்நொந்து ஊரைச் சுற்றிவந்தான். பகல் முழுவதும் அவனுக்கு உணவு கிடைக்கவில்லை.

இரவு வந்தது. பசியின் களைப்பு அவனுக்கு மூர்ச்சை தரும்போலிருந்தது. மிகத்தள்ளாடி நடந்தான். அப்பொழுது ஒருவன், நெய்மணம் வீசிடும் அன்னத்தை ஒரு தட்டில் ஏந்திப் போவது அவனுக்குத் தெரிந்தது. அவனைத் தொடர்ந்து குணநிதி போனான். கடுமையான பசி! அந்தத் தட்டில் அருமையான நெய்கமழும் படையல்! மிக ஆவலுடன் தனது நடையைத் துரிதப்படுத்தி, முன் செல்பவனை நெருங்கினான். அதற்குள் கோயில் வந்தது. தட்டு ஏந்திச் சென்றவன் அந்தக் கோயிலுக்குள் நுழைந்தான். அவன்கோயில் அர்ச்சகன். சுவாமிக்குப் படைக்க உணவு கொண்டு வந்திருக்கிறான்! சரி, பூசை முடித்து வரட்டுமென்று குணநிதி கோயில் வாசற்படியில் உட்கார்ந்தான்.

கோயில் அர்ச்சகன் தனது வேலையை மிக மெதுவாகத் தொடங்கினான். விளக்குகள் ஒவ்வொன்றாக ஏற்றப்பட்டன. கோயில் சாமிக்கு அபிஷேகம் முதலியன நடந்தன, தூபதீப நைவேத்தியங்கள் ஆயிரத்தெட்டு திருநாமங்களுடன் செய்யப்பட்டன.

வைத்த கண் வாங்காமல் கோயிலில் நடப்பதையெல்லாம் குணநிதி பார்த்திருந்தான். அர்ச்சகரோ விரைவில் பூசையை முடித்துத் திரும்பவில்லை, மாறாக வளர்த்திக்கொண்டே போனார். நடுநிசி கடந்தது, குணநிதியின் பசி பொறுக்கமுடியாததாகியது, அந்த அர்ச்சகன் இன்னும் முடிக்காமல், சோற்றை சுவாமி முன்னால் வைத்து தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தான்.

இரவின் கடைசி சாமமும் நெருங்கியது. எப்படியாவது சோற்றை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று—பசியின் தூண்டுதலால் குணநிதி விழித்தபடி இருந்தான். உள்ளே அர்ச்சகன் அடித்துக்கொண்டிருந்த மணி வலுக்குறைந்து வந்தது. கடைசியாக முற்றிலும் நின்றுவிட்டது. ஒன்றிரண்டு விளக்குகள் அணைந்துவிட்டன. குணநிதி உள்ளே தலை நீட்டிப்பார்த்தான். களைப்பு மிகுதியால், அர்ச்சகன் கண்ணயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தான்.

இதுதான் சமயமென்று குணநிதி கோயிலுக்குள் நுழைந்தான். மெதுவாக, அடிமேல் அடிவைத்து, சாமிக்குப் பக்கத்தில் போய் அவன் சேர்ந்தான். பூசைபாத்திரங்கள் பரப்பப்பட்டுக்கிடந்தன. எதில் சோறுவைக்கப்பட்டிருக்கிறது என்று அந்த இருட்டில் தெரியவில்லை. பக்கத்தில் அணைந்திருந்த விளக்கொன்றை ஏற்றிவிட்டு, சோறு இருந்த பாத்திரத்தைக் கண்டுபிடித்து, ஆவலுடன் குணநிதி வெளியேறினான். ஆனால் வெளியேறும் அவசரத்தில், தூங்கிக்கொண்டிருந்த பிராமணனின் காலை அவன் மிதித்துவிட்டான்.

அர்ச்சகன் விழித்தான். குணநிதி தப்பி

யாட முயன்றான். "திருடன்! திருடன்!" என்று கூக்குரலிட்டு, அர்ச்சகன் ஓடிவந்தான். காவலாளர்கள் எழுந்துவந்து, குணநிதியைப் பிடித்துவிட்டனர்,

"கோயிலில் சாமிக்குமுன் படைக்கப்பட்ட பிரசாதம்! அதை இவன் திருடிவிட்டான்?" கோயில் அர்ச்சகன் குற்றஞ்சாட்டினான். குணநிதி பதில் சொல்லமுடியாமல் தவித்தான். கையுங் களவுமாகப் பிடிக்கப்பட்டபின் என்ன பதில் தரமுடியும்? அவன் செய்த குற்றமோ கடுமையான தண்டனைக்குள்ளானது. சிவன் கோயிலில் திருடியது—மாபாதகம். காவலாளர்கள் குணநிதியைப் பிடித்துச் சென்றனர், அவன் தலை வெட்டப்பட்டது. உடல் துடிக்க, உயிர் பிரிந்தது. கோயிலில் திருடினால், அதற்கு மரணதண்டனை அளிப்பது சாத்திரத்தில் கூறப்பட்ட முறை.

யாரால் தடுக்கமுடியும்? குணநிதிக்கு அவ்வளவுதான் ஆயுள் இருந்தது, குணநிதியின் கணக்குப்படி! குணநிதி இறந்ததும் அவனைப் பற்றிச் செல்ல, யமதூதர்கள் வந்தனர், பாசக் கயிற்றை வீசி, குணநிதியின் உயிரைப் பிடித்தனர்; மாபாதகங்களைப் புரிந்தவனின் உயிரை யமதர்மனின் முன் நிறுத்த, அவர்கள் குணநிதியை (குணநிதியின் உயிரை) இழுத்துச் சென்றனர்.

"நிறுத்து!" என்று கோபக்குரல் வந்தது, யமதூதர்களுக்குக் கட்டளையிடும் துணிவு யாருக்குண்டு? யமதூதர்கள் அலட்சியமாகச் சென்றனர்.

"நில்லுங்கள்! இல்லாவிட்டால், கடுந்தண்டனை கிடைக்கும்" குரலின் கடுமை யமதூதர்களை நிற்கச் செய்தது. யமதூதர்கள் பார்வைக்குப் பயங்கரமானவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்களைவிடப் பயத்தையளிக்கும் தோற்றத்துடன் சிலர் அவர்கள் முன் நின்றார்கள்.

"நீங்கள் யார்?" என்று யமதூதர்கள் கேட்டார்கள்.

"எரியும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின் கணநாதர்கள்!"

முதலில் ஏற்பட்ட பயம் சிறிது அடங்கியது, சிவன் கோவிலில் திருடு நடைபெற்றதால், சிவபெருமானே விசாரித்துத் தண்டனை அளிக்கவேண்டுமென்று, குணநிதியை அழைத்துப்போகலாம் என்று கணநாதர்கள் வந்திருக்கிறார்கள் போலும். குணநிதியை அவர்களுடன் அனுப்பிவிடலாம். ஆனால் உயிரைப் பிடித்துவா என்று அனுப்பிய யமதர்மனிடம் திரும்பிப்போய் என்ன சொல்வது என்ற பயம் அவர்களுக்கு வந்தது.

"நாங்கள் கொண்டுபோய் யமதர்மராசனிடம் விட்டுவிடுகிறோம். அவர் தண்டனை தந்தபின், நீங்கள் அழைத்துப்போய், மேலும் தண்டனைகள் தரலாம்."

கணநாதர்கள் சிரித்தனர். "தண்டனை தருவதற்கல்ல. தண்டனைகள் தராமல் தடுப்பதற்கே அவனை நாங்கள் அழைத்துப்போக வந்திருக்கிறோம்."

யமதூதர்களுக்குத் திகைப்பு வந்தது. "இவனைக் காப்பாற்றவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்!"

"ஆமாம்!"

"இவன் செய்த மாபாதகங்கள் உங்களுக்குத் தெரியாதனபோலும்! பெயர்தான் குணநிதி என்பது, வாழ்க்கையில் இவனைவிட குணக்கேடன் எவனும் இருக்கமுடியாது. பஞ்சபாதகங்களில் முக்கியமானவற்றைப் பஞ்சாமிர்தமாக நினைத்து இவன் செய்துவந்தான். உயர்ந்த குலத்தில் பிறந்தான். ஆனாலும் குலாசாரத்தை மறந்து, குடியும் கூத்தியும் கொண்டு அலைந்தான். தந்தைக்கு வஞ்சனை செய்தான் தாயின் சொல்லை மீறினான்; சூதாட்டத்தில் ஈடுபட்டான். அவன் பேசாத பொய், செய்யாத களவு கிடையாது. வீட்டிலுள்ள பொருள்களை யெல்லாம் திருடிப்போய் சூதாட்டத்தில் ஒழித்தான். கட்டின மனைவியை வீட்டில் கலங்கவிட்டு, கணிகையர் வீடுகளில் காலங் கழித்தவன். இந்த மாபாவியை நீங்கள் காப்பாற்ற விரும்புகிறீர்கள்!"

சிவகணங்கள் புன்னகைசெய்தனர். "சிவபக்தியின் மேன்மை உங்களுக்குத் தெரியவில்லை."

யமதூதர்களுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிவகணங்களிடம் இருந்த மரியாதையால், சிரிப்பை அடக்கிக்கொண்டனர். "தனது வாழ்நாளில் குணநிதி, பக்தி மார்க்கத்திற்காக ஒரு மத்து வினாடிகூட செலவழித்தது கிடையாது. வாழ்வு முடியும் கடைசி நேரத்தில்கூட, சிவன் சொத்தைத் திருடிப்போகத்தான் அவன் முனைந்திருந்தான். அவனைப்போன்ற துராத்மாவை, மாபாவியைப் பார்த்திருக்க முடியாது. அவன் செய்துள்ள எண்ணற்ற பாவங்களுக்குக் கணக்கிலடங்கா நரகங்களில் போட்டு வாட்டவேண்டும்" யமதூதர்கள் ஆவேசத்துடன் சொன்னார்கள். (தொடரும்)

சென்னைத் துறைமுகம்

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மூன்று பெரிய துறைமுகங்களில் சென்னைத் துறைமுகம் மூன்றுவது பெரிய துறைமுகமாகும். சென்னைத் துறைமுகத்தில் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 20 இலட்சம் டன் எடையுள்ள பொருள்கள் ஏற்றுமதி—இறக்குமதி செய்யப்படுகின்றன. கல்கத்தாத் துறைமுகத்தில் சுமார் 90 இலட்சம் டன் பொருள்களும், பம்பாய்த் துறைமுகத்தில் சுமார் 70 இலட்சம் டன் பொருள்களும் ஏற்றுமதி—இறக்குமதி செய்யப்படுகின்றன. சென்னைத் துறைமுகத்திற்கு அடுத்தப்படியாக வருவது கொச்சித் துறைமுகமாகும். இங்கு சுமார் 9 இலட்சம் டன் சாமான்கள் ஏற்றுமதியாகவும் இறக்குமதியாகவும் செய்கின்றன. விசாகப்பட்டினம் துறைமுகத்தில் சுமார் 4 இலட்சம் டன் பொருள்கள் ஏறி இறங்குகின்றன.

சென்னைத் துறைமுகம் இயற்கையினால் ஏற்பட்ட துறைமுகம் அல்ல, மனிதனால் உண்டாக்கப்பட்டதேயாகும். ஏழாம் எட்வர்டு, வேல்சு இளவரசராக இருக்கும்போது, 1875 டிசம்பர் திங்களில் இந்தியாவுக்கு வருகை தந்தபோது, சென்னைத் துறைமுகத்தின் அடிப்படைக் கல்நாட்டு விழா அவரால் ஆற்றுவிக்கப்பட்டது. அதற்கு முன்னால் சென்னைத் துறைமுகம் மற்றைய சாதாரணத் துறைமுகங்களைப்போலதான் காட்சியளித்து வந்தது. பெருங்கப்பல்கள் துறைமுகத்திற்குச் சில மைல்களுக்கு அப்பால் நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சும். சாமான்களையும் மக்களையும் கொண்டுபோய்க் கப்பலிடத்துச் சேர்க்கவும், அங்கிருந்து துறைமுகத்திற்குக் கொண்டு வரவும் படகுகள் பயன்படுத்தப்பட்டன.

சென்னைத் துறைமுகம் நான்குபுறமும் பெரும் அடைப்புச் சுவர்களால் எழுப்பப்பட்டு, வடகிழக்கு மூலையில் வடக்குநோக்கி வழி திறந்துவிடப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 13 கப்பல்கள் நிறுத்துவதற்கு மட்டுமே இடம் இருக்கின்றன. சாமான்கள் கப்பல் ஏழும், நிலக்கரி கப்பல் இரண்டும், மண்ணெண்ணெய்—டீசல் எண்ணெய் போன்ற எண்ணெய்க் கப்பல் மூன்றும், பெட்ரோல் கப்பல் ஒன்றும் மட்டுமே தங்கலாம். பொதுவாக ஒன்பது கப்பல்களுக்குமேல் உள்ளே நிற்க அனுமதிப்பதில்லை.

சென்னைத் துறைமுகத்திற்குப் பேரிடைஞ்சலாக இருந்துவருவது மண் மூடுவதுதான். தென்மேற்குப் பருவக்காற்று வீசுங்காலத்தில், ஏராளமான மணல் துறைமுகத்திற்குள் புகுந்து மேடிட்டுவிடுகின்றது. ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான டன்கள் வாரி எடுக்கப்பட்டு, நடுக்கடலில் கொண்டுபோய்க் கொட்டபபடுகின்றன, 1653-54 ஆம் ஆண்டில் மட்டும் துறைமுகத்திற்கு வெளிப்பக்கத்திலிருந்து 3,23,040 டன் மணலும், துறைமுகத்திற்குள் 1,12,390 டன் மணலும் வாரி எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இடைஞ்சல்கள் இருந்தபோதிலும், கரையிலிருந்து 30 அடிக்குள் கப்பலை நிறுத்துவதற்கு வசதி கிடைக்கிறது. துறைமுகத்தில் கடலின் ஆழம் 32 அடி ஆகும்.

சென்னை இப்பொழுது முக்கியமான ஒரு துறைமுகமாக இருந்துவந்தபோதிலும், இதன் வசதிகளைப் பெருக்குவதற்கும், இதனை மேலும் வளர்ச்சியுறச் செய்வதற்கும் வழிவகைகள் ஏராளமாக இருக்கின்றன.

சென்னைத் துறைமுகத்திலிருந்து முக்கியமாகப் பதனிடப்பட்ட தோல், பதனிடப்படாத தோல், எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் வகைகள், ஆடைகள், தோண்டி எடுக்கப்பட்ட கனிப்பொருள்கள், புகையிலை முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சென்னையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களில் முக்கியமானவை என்று குறிப்பிடத்தகுந்தவை, மண்ணெண்ணெய் வகைகள், நிலக்கரி, உணவுப்பொருள்கள், உலோகங்கள், தேக்கு, ஆடைகள, கலவை உரங்கள், பொறிகள், எஃகு, இரும்புச் சாமான்கள் முதலியனவாகும்.

சென்னையிலிருந்து கல்கத்தாத் துறைமுகத்திற்குப் பெரும்பகுதிச் சாமான்கள் ஏற்றுமதியாகின்றன. சென்னையிலிருந்து மேற்கே

ரட் பிரிட்டன், ஐரோப்பியநாடுகள் ஆகிய
ற்றிற்கும், கிழக்கே சிங்கப்பூர், பினங்கு,
மா, இலங்கை ஆகியவற்றிற்கும் சரக்குகள்
றுமதி செய்யப்படுகின்றன. அமெரிக்கா,
த்திரேலியா ஆகிய கண்டங்களுக்கு அவ்
வாகச் சரக்குகள் ஏற்றுமதி செய்யப்படுவ
லை.

1953-54-ஆம் ஆண்டில் மட்டும் சென்னையில் 41,325 டன் சரக்குகள் இறக்குமதியாகி க்கின்றன; 4,94,610 டன் சரக்குகள் ஏற்று யாகியிருக்கின்றன. மொத்தத்தில் முக் ல்பகுதி இறக்குமதியாகவும், கால் பகுதி றுமதியாகவும் இருந்துவருகிறது. காரணம் ன்றாடு தொழில்பெருக்கத்திலும், பொருள் பத்தியிலும் வடநாடுபோல அவ்வளவாக ர்ச்சியடையாமலிருப்பதேயாகும்.

சென்னைத் துறைமுகத்தைச் சுமார் ரூ. $8\frac{1}{2}$ டி செலவில் விரிவாக்கும் திட்டம் ஒன்றை சியலார் இப்பொழுது தீட்டிவைத்துள் ர்கள். அதன்படி ஏற்றுமதியாகவேண்டிய மான்களைக் குவித்துவைப்பதற்கும், இறக்கு செய்யப்படும் சாமான்களைப் போட்டுவைப் ற்கும் கிடங்குகள் பல கட்டுவார்கள், மேற் ண்டு சில கப்பல்கள் வந்து நிற்பதற்கான ங்களைக் கட்டுவதற்கும் முயற்சி எடுக்கப் டிருக்கிறது.

1953-54-ஆம் ஆண்டில் மட்டும் 1059 கப்பல்கள் இந்தத் துறைமுகத்தில் புகுந்து சரக்குகளை இறக்கியும், ஏற்றிக்கொண்டும் போயிருக்கின்றன.

உலக வாணிகத்தில் இந்தியா $\frac{1}{2}$ சதவிகித எடையுள்ள பொருள்களை அகற்றும் கப்பல் வசதியைத்தான் படைத்திருக்கிறது. அதே நேரத்தில் அமெரிக்கா 29 சதவிகித எடையையும், பிரிட்டன் 20 சதவிகித எடையையும், நார்வே 7 சதவிகித எடையையும், இத்தாலி 4 சதவிகித எடையையும் அகற்றும் கப்பல் வசதிகளைப் பெற்றிருக்கின்றன.

சென்னை திராவிடத்தின் முக்கியமான துறைமுகங்களில் ஒன்றாக விளங்க எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மூன்றுபுறம் கடலால் சூழப்பட்ட திராவிடம் கடல் வாணிகத்தைப் பெருக்கிக் கொள்வதற்குப் பல்வேறு வசதிகளும் இருக்கின்றன. திராவிடம் தனி நாடானால், தோழர் வ. உ. சிதம்பரனார் கண்ட கனவுகளையும், நாம் காணும் கனவுகளையும், நனவாக்கி, மற்ற உலக நாடுகளுக்கு ஈடாகத் திராவிடத்தை நிலை நிறுத்திச், சென்னையை உலகத்துறைமுகங்களில் செழிப்பும், சிறப்பும் நிறைந்த ஒன்றாக ஆக்கிக்காட்டலாம்!

சாப்பாட்டு நேரம்

பட்டணத்தைச் சுற்றிப் பார்க்க முதல்தடவையாக வந்த ஒருவர், தங்குவதற்காக குறிப்பிட்ட ஒரு ஓட்டலைத் தேடி அலைந்து கண்டுபிடித்து அதில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அந்த ஓட்டலில் சாப்பாடு நன்றாயிருக்கும் என்று அவர் கேள்விப்பட்டிருந்ததால் வெளியில் எங்கு சென்றாலும் சாப்பாடு நேரத்திற்கு அங்கு வந்துவிடவேண்டும் என்று முடிவு செய்து ஓட்டல் முதலாளியிடம் சென்றார்.

“ஏன் சார், இங்கு சாப்பாட்டு நேரங்கள் என்ன?”

“காலை $6\frac{1}{2}$ மணியிலிருந்து $9\frac{1}{2}$ மணிவரை டிபன், $9\frac{1}{2}$ மணியிலிருந்து 3 மணிவரை சாப்பாடு. 3 மணிமுதல் 7 மணிவரை சிற்றுண்டி, 7 மணிமுதல் இரவு 10 வரை சாப்பாடு.”

“சார் நான் பட்டணத்தைச் சுற்றிப்பார்க்க வந்திருக்கிறேன்; நாள் முழுவதும் சாப்பிட்டுக் கொண்டிருப்பதற்காக அல்ல!”



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மறுநாள் குலசேகரன் தனது எதிர் வாதத்தை ஆரம்பித்தான்.

"எதிரி தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும், அத்துடன் சிறு குழந்தையை மரணமடையச் செய்ததாகவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளன. மிகக் கடுமையான குற்றச் சாட்டுகள்; மிகக் கடுமையான தண்டனைகள் தரப்படவேண்டியவை, குற்றங்கள் நிகழ்ந் திருந்தால்—குற்றங்கள் சரியாக நிரூபிக்கப பட்டால்.

கடலலையில் தத்தளித்துக்கொண்டிருந்த எதிரி காப்பாற்றப்பட்டிருக்கிறுள்; மூர்ச்சை யான நிலையில் எடுக்கப்பட்டு, ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறுள். கரையோரத்தில கைக்குழந்தை மூச்சற்று கிடந்தது, இறந்து விட்டது, இந்தக் கண்டுபிடிப்புகளை யாரும் மறுக்கவில்லை. கொண்டுவரப்பட்ட சாட்சியங் கள் திரும்பத்திரும்ப இதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றன.

பிராசிகியுஷனல் கொண்டுவரப்பட்ட 2-வது சாட்சிதான் முதலாவதாக எதிரியைக் கடலில் கண்டுபிடித்தவன். அவனுடைய சாட்சி யத்தை அப்படியேச் சொல்லவேண்டுமானுல் —பார்த்தால், மீன் துள்ளுகிற மாதிரி அலை யில் தெரிந்தது; பக்கத்தில் ஓடினேன். அப் புறம் பெண் அலையில் மோதுவது தெரிந்தது! மற்றும் வந்த சாட்சியங்கள் இதற்கப்புறம் நிகழ்ந்தவைகளைச் சொல்லுகின்றன. எனவே எதிரி கடலில் விழுந்ததை யாரும் பார்க்க வில்லை. கடலில் தவறுதலாக விழுந்தாளா, அல்லது குற்றச்சாட்டில் சொல்வதுபோல தற்கொலைக்கு விழுந்தாளா என்று சொல்ல முடியாது.

மேலும் மற்ருென்று, எதிரியை முதலி கண்டுபிடித்த இரண்டாவது சாட்சியின்படி எதிரி அலையில் தத்தளித்ததாகக் கூறப்ப டிருக்கிறது. தத்தளிப்பு என்பது, கடலி அமிழ்ந்துபோகாமல் போராடுவதால்தா உண்டாகமுடியும். தற்கொலைக்குத் தயாரா சென்றிருந்தால் அலைகளுடன் போராடுவது அலைகளின் மத்தியில் தத்தளிப்பது என்பன ஏற்பட்டிருக்காது.

கடலோரத்தில் சென்றிருந்த பொழு தவறி விழுந்திருக்கலாம். பகல் பன்னிரண் மணி, அந்த நேரத்தில் உலவ யாராவது செல் வார்களா என்று பிராசிகியுஷன் தரப்பி வாதிக்கப்பட்டது. நான் அதையே திருப்பி கேட்க விரும்புகிறேன், சிறு மாற்றத்துடன் பகல் பன்னிரண்டு மணி; அந்த நேரத்தில் தற்கொலை செய்துகொள்ள யாராவது அங் செல்வார்களா என்று கேட்கிறேன். த கொலைக்குத் தயாராகிச் செல்பவர்க இருட்டு வேளையில் செல்வார்கள். இருட் நேரத்தில் யாரும் பார்க்கமாட்டார்கள், க னித்தாலும், காப்பாற்றமுடியாது. தற்கொ லைக்கு ஏற்ற நேரம் இரவு. ஆனுல் கடற்கரை குச் சென்ற நேரம் பகல் பன்னிரண்டு மணி குச் சற்றுக் குறைய. அவள் போகும்பொழு மிகப்பலர் அவளைப் பார்த்திருக்கிறுர்க கடும்பகலில் உலவச் செல்வார்களா என் கேட்டால், கடும்பகலில்—எல்லோரும் கவ கும் நேரத்தில் தற்கொலைக்குச் செல்வார்க என்று கேட்க விரும்புகிறேன்.

கடலில் எப்படி விழுந்தாள்? ஏன் விழு தாள்? தெரியாது. சாட்சியங்கள் எது அதைப்பற்றிக் கூறவில்லை. கடலலையில் சிக் யிருந்த எதிரியை கரையோரத்தில் சேர்த் பொழுது அவள் மூர்ச்சையாக இருந்ததா கூறப்படுகிறது. 'எவ்வளவு நேரமாக மூ

யான நிலைமையில். இருந்தாள் ன்று கூறமுடியவில்லை. கடலலையில் விழும் ாழுதும் அவள் மயக்கமான நிலையில் இருந் ருக்கக்கூடும். அத்தகை நிலை உண்டாவ ற்கும் தகுந்த காரணமிருந்தது. கடுமையான யயில், கொதிக்கும் மணல், இதில் நடமா சென்றவளுக்கு மயக்கமுண்டாகியிருக்க ம். மயக்கமுண்டான நிலையில் அவள் ழ விழுந்துவிட கடலலையினால் இழுக்கப்பட் ருக்கலாம். இதுவரையில் ஒருவகையில் த்தியமானதே. உண்மையில் நிகழ்ந்திருக் கூடியதுமாகும்.

இரண்டாவதாகக் குழந்தை இறந்தது ற்றி மிகவும் மிகைப்படுத்திக் கூறப்படுகிறது. றந்துவிட்டது என்ற ஒரே காரணத்துக் கக் கொலைக்குற்றத்தைச் சாட்டிவிடக் டாது, குழந்தையையும், தன்னையும் மாய்த் க்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் ஏற் ட்டிருந்தால், குழந்தையுடன் அவள் கடலில் றங்கியிருக்கவேண்டும். ஆனால் குழந்தை ம், ஒன்றாகக் காணப்பட்டதாகச் சாட்சிகள் துவும் சொல்லவில்லை.

பிராசிகியுஷன் முதலாவது சாட்சி பார்த்த பாழுது, தண்ணீருக்குப் பக்கத்தில் மூர்ச் சயான எதிரி கிடந்தாள், கரையோரத்தில் ற்று தள்ளி குழந்தை கிடந்தது. குழந்தை ரையிலேயே விடப்பட்டிருக்க வேண்டும். திரி மட்டும் அலையில் தத்தளித்திருக்க வண்டும்.

குழந்தையின் உடலைப் பரிசோதனை செய்த ாக்டரின் சாட்சியத்தை மிக முக்கியமான ாக நான் வைக்கிறேன். அவர் பரிசோதனை சய்தபொழுது பகல் 1-35. குழந்தை இறந்து ன்றரை அல்லது இரண்டுமணி நேரமிருக்க ாம் என்று அவர் குறிப்பிட்டார். அதாவது 1-30-லிருந்து 12 வரையில் உத்தேசமாகக் றலாம். எதிரி கடலலையிலிருந்து காப்பாற் ப்பட்டது 12-10 அல்லது ஒருசில நிமிடங் ளுக்குமுன். கடலலையில் அவள் தத்தளித் க்கொண்டிருந்தது, நிச்சயமாக மணிக்கணக் ல் இருந்திருக்கமுடியாது. ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களுக்குமேலிருக்காது. எனவே ழந்தையுடன் எதிரி கடலில் இறங்கி, தற் கொலை செய்துகொள்ள முயன்று, குழந் தையை இறக்கும்படி செய்திருந்தால், குழந் தையின் சாவு 12-05-க்குப் பின்னதாக இருந் திருக்கும். ஆனால் டாக்டரின் சாட்சியப்படி, ழந்தை 11-30 விருந்து 12-க்குள்ளாக இறந் திருக்கவேண்டும். எனவே குழந்தை இறந்த ற்கும், எதிரி கடலலையில் காணப்பட்டதற் கும் சம்பந்தமில்லை.

பின் குழந்தை எவ்வாறு இறந்ததென்று பிராசிகியுஷன் தரப்பில் கேட்கப்படலாம். குழந்தையின் மரணப் பரிசோதனையை செய்த டாக்டரின் சாட்சியத்தை மறுபடியும் நான் சுட்டிக்காட்டுகிறேன். மரணப்பரிசோதனை செய்தபொழுது, குழந்தையின் உடலில் காயம் எதுவும் காணப்படவில்லை. கழுத்தில் அழுத்திச் சாகடிக்கப்பட்டதற்கான அறிகுறி களும் கிடையாது. எனவே குழந்தையின் சாவுக்கும், எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

இவற்றால், நான் குறிப்பிடுவது, எதிரி கடலலையில் வீழ்ந்ததை, எவ்வாறு ஏன் வீழ்ந் தாள் என்பதை நேரில் கண்டதாக ஒரு சாட் சியமும் இல்லை. வேண்டுமென்றே வீழ்ந்ததா, அல்லது தவறுதலாக வீழ்ந்ததாக, எதுவும் நிரூபிக்கப்படவில்லை. எனவே தற்கொலையா, அல்லவா பிராசிகியுஷன் நிரூபிக்கவில்லை. குழந்தையின் இயற்கையான சாவுக்கும், எதி ரிக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. எதிரி கடலில் வீழ்ந்ததாகக் கூறப்படும் நேரத் துக்கு, கால் அல்லது அரைமணி நேரத்துக்கு முன்னதாகவே குழந்தை இறந்துவிட்டது. எனவே இக்குற்றங்களும் நிரூபிக்கப்படவில்லை. எதிரி குற்றமற்றவள். சாட்சியங்களை நன்கு கவனித்த கோர்ட்டார் அவர்களும் அதே முடிவுக்குத்தான் வரமுடியும்.''

குலசேகரன் தனது வாதத்தை முடித்தான். அத்துடன் அன்று கோர்ட் கலைந்தது.

குலசேகரனின் வாதம் திருப்திகரமாகவே இருந்தது. ''இனி வழக்கைத் தள்ளிவிடு வார்கள்!'' என்று தங்கம் சொன்னாள், அவ ளுக்குப் பக்கத்தில் சகுந்தலா உட்கார்ந்திருந் தாள். முன்பக்கத்தில் குலசேகரன் உட்கார்ந் திருந்தான்,

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

''உன்டைய வாதத்திற்கு, இரண்டு குற்றங் களும் மறுக்கப்பட்டதே!''

''ஆமாம்! தண்டிப்பதற்குச் சரியான கார ணங்களில்லை.''

குலசேகரன் திரும்பிப்பார்த்தான், தங்கத் திற்குப் பதில் சொல்வதற்கு மட்டுமல்லாமல், சகுந்தலாவையும் பார்ப்பதற்கு. சகுந்தலா முகத்தை வெளிப்பக்கம் திருப்பிக்கொண் டாள். அவள் முகத்தில் படிந்திருந்த கவலைக் கோடுகள் சற்று கலைந்திருந்தன. நம்பிக்கை அவள் முகத்தில் சேர்ந்தது.

* * *

“ கோர்ட் கலைந்ததும், உனக்காகக் காத்திருந்தேன். காணோமே!” வீட்டிற்குள் நுழைந்த தங்கத்தைக் கமலநாதன் கேட்டான்.

“ நீங்கள் வருவதற்கு நாழியாகலாம் என்று சேகரனுடன் கிளம்பிவந்துவிட்டேன்.”

மறுபேச்சுப் பேசாமல் கமலநாதன் உட்கார்ந்தான். கோர்ட் கலைந்ததும், அவன் தங்கத்துக்காகக் காத்திருந்தான். சகுந்தலாவை அழைத்துக்கொண்டு அவள் குலசேகரனின் காரில் ஏறுவதையும் அவன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான்.

கணவன் ஏதும் பேசாமலிருப்பதைக் கண்ட தங்கம் பேச்சைத் தொடர்ந்தாள். “ காலையில் கேட்டபொழுது கோர்ட் முடிந்ததும் வருவதற்கு நாழியாகலாம் என்று சொன்னீர்களே!”

“ ஆமாம், மறந்துவிட்டேன்” கமலநாதன் பத்திரிக்கையை எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தான். மேற்கொண்டு பேச்சு தொடரவில்லை. தங்கம் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

“ நமசிவாயம்! சச்சிதானந்தம்!” வெளியில் பக்தியின் கனிந்த குரல் கேட்டது. கமலநாதன் எழுந்து போனான். யாரந்த சாமியார் என்று தங்கம் உட்கார்ந்திருந்தாள்.

“ வரவேண்டும், வரவேண்டும்!” நித்தியானந்த சாமியாரை அழைத்துக்கொண்டு கமலநாதன் தன்னறைக்குள் போய் உட்கார்ந்தான்.

“ நமசிவாயம்! சச்சிதானந்தம்!” என்று மறுபடியும் கூவிவிட்டு, சாமியார் உட்கார்ந்திருந்தார்.

“ சாமிகளைப் பார்த்து நெடுநாட்களாயது!” பணிவுடன் கமலநாதன் கேட்டான். நித்தியானந்தசாமிகளின் சொற்பொழிவுகளை அவன் தவறுவதில்லை. அவரிடம் அபார மதிப்பு அவனுக்கு உண்டாயது. அவருடைய சீலத்துக்கும், ஞானத்துக்கும் அவரை ஒரு மகான் என்றே சொல்லவேண்டும் என்று கமலநாதன் அடிக்கடி மெச்சிப் பெருமைப்படுவான்.

“ வேலைத் தொந்தரவு அதிகம்போலிருக்கிறது!” சாமியார் கேட்டார்.

“ இப்பொழுதுதான் கோர்ட் முடிந்து வந்தேன்' ஒரு வழக்கு — பெண்ணொருத்தித் தற்கொலைக்கு முயன்றதாகக் குற்றச்சாட்டு— அத்துடன் கைக்குழந்தையும் சாகடிக்கப்பட்டிருக்கிறது.”

சாமியார் ‘உச்’ கொட்டினர். “ பாபம்! பாபம்! தற்கொலையுடன் சிசுஹத்தியும் கூட! மகாப்பாபம்,”

“ மிகப் பெரும் பாபம்தான். ஆனால், கோர்ட்டில் வரும்பொழுது, பாபமான காரியம் என்று சொன்னால் மட்டும் தண்டனை கொடுக்கமாட்டார்கள். சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்க வேண்டும்.”

“ சட்டம் தண்டித்தாலும் தண்டிக்காவிட்டாலும், ஆண்டவனின் தண்டனை அந்த பாபிகளுக்கு நிச்சயம்!”

“ ஆனால் சட்டமும் பேசாமலிருக்கக்கூடாது நீதியை நிலைநாட்டவேண்டும்.”

“ஏன் இந்த வழக்கில் சிக்கல் இருக்கிறதா?” நித்தியானந்த சாமி கேட்டார்.

“ எதிரி குற்றஞ்செய்துள்ளது நன்றாகத் தெரிகிறது. ஆனால் நிரூபிக்க சாட்சிகள் பலமாக இல்லை. தற்கொலை செய்துகொள்ளப் போனாள்—கைக்குழந்தையைச் சாகடித்துவிட்டாள்—சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும். அவள் திருமணமாகாதவள் என்ற ஒரு குறிப்பு மட்டும்தான் எனக்குக் கிடைத்தது. அதற்கு முந்திய வரலாறு தெரியவில்லை” கமலநாதன் வழக்கு விவரத்தைச் சொன்னான்.

“ பெண்ணின் பெயரென்ன?”

“ சகுந்தலா?”

“ எங்கேயோ கேள்விப்பட்ட பெயராகயிருக்கிறதே! ஆமாம், எங்கள் மடத்தில் முருகதாசர் என்ற ஒரு அடியார் இருந்தார். அவர் செங்கல்பட்டுக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஊருக்குப் போயிருந்தபொழுது—ஊரின் பெயர் ஞாபகமில்லை—அந்த ஊரில் சகுந்தலா என்ற வாத்தியார் வேலை பார்த்த ஒருபெண், மற்றொருவனுடன் கூடிக்கொண்டு ஊரைவிட்டு ஓடிவிட்டதாகப் பரபரப்பு இருந்ததாம். பையன் கொஞ்சம் பணக்காரவீட்டுப் பிள்ளை. கையில் காசு இருப்பதைக் கண்டதும், இந்தப் பெண் வலைவீசி, கெடுத்துவிட்டாள். இவர்களது சூதை முதலில் முருகதாசர் கண்டுபிடித்தாராம். உடனே இந்தக் கள்ளக்காதலர்கள் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். முழு விவரங்கள் எனக்குத் தெரியாது. முருகதாசரை வேண்டுமானால் நாளைக்கு அனுப்புகிறேன். அவரைக் கேட்டால் சரியாகச் சொல்வார்! ஆனால் லௌகிக விஷயங்கள், ஆத்மார்த்தத்துறையில் ஈடுபட்டிருக்கும் எங்களைப்போன்றவர்கள் இதைப்பற்றி கவலைப்படக்கூடாது! நமசிவாயம்! சச்சிதானந்தம்!” மேலே நோக்கி விழித்துவிட்டு, நித்தியானந்தம் உட்கார்ந்தார்.

" யார்து ? முருகதாசரா ? அவர் இங்கு வர வண்டிய அவசியமில்லை. நானே மடத்துக்கு ந்து அவரைச் சந்திக்கிறேன். ஆத்மார்த்தத் றையில் ஈடுபட்டிருக்கிறவர்களை இந்த ழக்குகளில் இழுப்பது நல்லதல்லதான் ! றல் சமூகத்தில் நீதியை நிலைநாட்ட சட்டத் ற்கு உதவிசெய்வது எல்லோருடைய கட மையுமாகும்."

" ஆமாம் ! ஆண்டவனின் திருவிளையாடல் ளில் அதுவும் ஒன்று, முருகதாசர் பக்தி ன், சிறந்த ஞானி, சித்தாந்தங்களைக் கரை ண்டவர்!"

" அப்படியானல் அவரை அவசியம் நான் ர்க்கவேண்டும்!" ஏதோ பக்தி மார்க்கத்தில் வசம் அடைந்தவன்போல, கமலநாதன் கட்டுக்கொண்டான்.

நித்தியானந்த சாமிகள் ஞானமார்க்கத்தைப் ற்றிப் பேசினர். அவர் சொல்வதில் சில ற்றைக் கமலநாதனல் முழுவதும் ஒத்துக் காள்ளமுடியவில்லை. ஆனல், அவர் மிக ம்பிக்கையுடனும், உருக்கத்துடனும் சொல் ம்பொழுது, அவற்றின் வயப்பட்டு இருந் ன். கடுமையான துறவு, காயமே இது பாய்யடா என்ற வேதாந்தங்கள் மிகக் கசப் னதாக—ஒத்துக்கொள்ள முடியாததாக ருந்தபோதிலும், அதைச் சொல்லும்பொ து உயர்ந்த தத்துவமாக, விரும்பக்கூடிய க்தி நிலையாகக் காணப்பட்டது.

நித்தியானந்த சாமிகள், வந்துபோனதும்; ழக்கைப்பற்றிய புதுக்குறிப்பு கமலநாதனுக் க் கிடைத்தது. சகுந்தலா திருமணமாகாத ள் என்பதை அவன் ஓரளவுக்கு ஊகித்துத் ன் கண்டுபிடிக்க முடிந்தது. நிச்சயமாக தலில் தெரியாது. இருந்தாலும், அதை றுதியாக அவன் சொன்னபொழுது, சகுந் லா மூர்ச்சையடைந்தாள். அவள் திருமண காதவள் என்பது நிச்சயிக்கப்பட்டது. வன் எவ்வளவு முயன்றும் அதற்குமேல் யான விவரங்கள் கிடைக்கவில்லை. இப் பாழுது நித்தியானந்த சாமிகள் சொல்வ தப் பார்த்தால், முருகதாசரைக் கொண்டு ர் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாம் ழக்கு ஆரம்பத்திலேயே தெரிந்திருந்தால், லதாயிருந்திருக்கும். மறுநாள் கடைசியாக ாசிகியுஷன் எதிர்வாதத்துக்குப்பின் ழக்கு முடிவடையலாம்.

மறுநாள் காலை நித்தியானந்தசாமிகள் தங்கி ருக்கும் மடத்துக்குக் கமலநாதன் சென்றான். த்தியானந்த சாமிகள் தியானத்தில் ஈடுபட் டிருந்தார். கமலநாதன் சிறிதுநேரம் காத்திருந் ததும், சாமிகள் தியானத்தைவிட்டு எழுந்து வந்தார்.

முருகதாசரைப் பார்க்கவந்தேன். என்று கமலநாதன் அமர்ந்தான்.

" முருகதாசர் சற்றுமுன்தானே தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டார். வீட்டு விலாசத் தைக் கொடுத்து, நான்தான் அடையாளமும் சொல்லியனுப்பினேன். நீங்கள் அவரைப் பார்க்கவில்லை."

" நான் கிளம்பியதற்குப் பின் அவர் வந் திருக்கவேண்டும். வழக்கைப்பற்றி அவரிடம் கேட்டீர்களா ?"

" வழக்கைப்பற்றிச் சொல்லி, கமலநாதன் உங்களிடம் நேரில் கேட்க விரும்புகிறர் என் றும் சொல்லிவைத்தேன். அவருக்கும் முழு விவரங்கள் சரியாகத் தெரியாதாம். அந்த ஊருக்குச் சமயச் சொற்பொழிவுக்காகப் போன பொழுது, அவர்களைப்பற்றி ஊரில் பேசிக் கொண்டதாகவும், அவர்கள் ஓடிப்போவதற்கு முதல்நாள் நேரில் தான் பார்த்து அவர்க ளுடைய ஒழுங்கினத்தைக் கண்டித்து நல்வழிப் படுத்த முயன்றதாகவும், அதனல் பயந்து போய் அவர்கள் ஊரைவிட்டுப் போய்விட்ட தாகவும், பின் அவள் அவனைவிட்டு, மற்றொரு வனுடன் எங்கோ போய்விட்டதாகவும் அவர் சொன்னர். முழுவிவரங்களையும் அவரைக் கேட்டால் தெரியும்."

கமலநாதன் வீட்டுக்குத் திரும்பிவந்தான். யாரோ வந்துபோனதாக வேலைக்காரன் சொன்னன், யாரென்று நிச்சயமாகத் தெரிய வில்லை. கமலநாதன் காத்திருந்தான். ஆனல் கோர்ட்டுக்குப் போகவேண்டிய நேரமாகிவிட் டது.

தனது வாதத்தை ஒத்திப்போட்டு, மற் றொரு சாட்சியத்தைக்கொண்டுவரலாமா எனறு கமலநாதன் யோசித்தான். "மிக முக் கியமான சாட்சி ஒன்று கிடைத்திருக்கிறது. அதனல் வாதத்தை ஒத்திப்போட்டு, அந்த சாட்சியத்தையும் எடுக்க கோர்ட்டாரின் அனுமதி கோருகிறேன்."

நீதிபதி ஆச்சரியமடைந்தார் " வழக்கு முடி யும் தருவாயிலா ?"

" மிக முக்கியமான சாட்சி !"

" யாரது ?"

" முருகதாசர் என்பவர்."

வாரீர்!

[ஆனந்தக்களிப்பு மெட்டு]

இந்தி எதிர்த்திட வாரீர்—நம்
இன்பத் தமிழ்தனைக் காத்திட வாரீர் (இந்தி)

முந்திய காலத்து மன்னர்—நம்
முத்தமிழ் நாட்டினில் தொத்திடும் நோய்போல்
வந்த வடமொழி தன்னை—விட்டு
வைததத னால்வந்த தீமையைக் கண்டோம். (இந்தி)

செந்தமிழ் தன்னில் இல்லாத—பல
சீமைக் கருத்துக்கள் இந்தியில் உண்டோ ?
எந்த நலம் செய்யும் இந்தி—எமக்
கின்பம் பயப்பது செந்தமிழன்றோ. (இந்தி)

தென்னாடு தான்எங்கள் நாடு—நல்ல
செந்தமிழ் தான்எங்கள் தாய்மொழி யாகும்
புன்மைகொள் ஆரிய நாட்டை—எங்கள்
பொன்னாட்டி னோடு பொருத்துதல் ஒப்போம். (இந்தி)

இன்னலை ஏற்றிட மாட்டோம்—கொல்லும்
இந்தியப் பொதுமொழி இந்தி என்றாலோ
கன்னங் கிழிந்திட நேரும்—வந்த
கட்டாய இந்தியை வெட்டிப் புதைப்போம். (இந்தி)

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

குற்றவாளிக் கூண்டில் உட்கார்ந்திருந்த சகுந்தலா தாக்குண்டவள்போல எழுந்து நின்றாள். அவள் முகம் வெளிறிட்டது. "வேண்டாம்! வேண்டாம்! நான் ஒப்புக் கொள்ளுகிறேன்! தற்கொலை செய்துகொள்ள நான் கடலில் விழுந்தது உண்மைதான்!" அவள் முகத்தை மறைத்துக்கொண்டு சத்த மிட்டாள்.

கோர்ட்டில் அமைதி நிலவியது. யாரும் எதிர்பார்க்கவில்லை.

"நீ சொல்வது உனக்கு எதிராகப் பயன் படுத்தப்படும் என்பது தெரியுமா?" நீதிபதி கேட்டார்,

"தெரியும்."

(தொடரும்)

வினாவும் விளக்கமும்

வினா : முதலில் தேவைப்படுவது சமுதாயச் சீர்திருத்தமா அல்லது பொருளாதாரச் சீர்திருத்தமா?

விளக்கம் : சமுதாயம்—அரசியல் — பொருளாதாரம் ஆகிய மூன்று சீர்திருத்தங்களில், முதலில் தேவைப்படுவது இது, பின்னால் தேவைப்படுவது இது என்று பிரித்து ஒதுக்கிவைக்கக்கூடிய தன்மையுடையது எதொன்றுமில்லை, மூன்றும் ஒருசேரத் தேவைப்படுபவைதாம்.

வேட்டியிலுள்ள குறுக்கு இழையும் நெடுக்கு இழையும் எப்படி ஒன்றோடொன்று பிணைந்து வேட்டியை உருவாக்குகின்றனவோ, அதுபோலவே சமுதாயம்—அரசியல்—பொருளாதாரம் மூன்றும் ஒன்றோடொன்று பிணைந்து இன்றைய நாகரிக வாழ்வை உருவாக்குகின்றன.

அரசியலும் பொருளாதாரமும் ஒரு சிறிதும் கலக்காத முழுச் சமுதாயத்தையோ, அல்லது சமுதாயமும் பொருளாதாரமும் ஒருசிறிதும் கலக்காத முழு அரசியலையோ அல்லது சமுதாயம் அரசியலும் ஒருசிறிதும் கலக்காத முழுப் பொருளாதாரத்தையோ இன்றைய நாகரிக வாழ்வில் நாம் காணமுடியாது. நாம் சமுதாயப் பிரச்சினை என்று ஒன்றைக் குறிப்பிடுகிறோம் என்றால், அது முழுக்க முழுக்கச் சமுதாயமே கொண்டது என்று பொருளல்ல, அதில் சமுதாயப் பிரச்சினை மிகப் பெருத்தும் அரசியல் — பொருளாதாரப் பிரச்சினைகள் மிகச்சிறுத்தும் காணப்படுகின்றன என்று பொருள். அதுபோலவே அரசியல் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை என்று குறிப்பிடுகிறோம் என்றால், அவைகளில் முறையே அரசியல் பிரச்சினையும், பொருளாதாரப் பிரச்சினையும் மிகப்பெருத்தும், மற்றப் பிரச்சினைகள் மிகச்சிறுத்தும் காணப்படுகின்றன என்று பொருள். காட்டுமிராண்டிக் காலத்திலும், வரலாற்றுக் காலத்துக்கு முன்பும் இந்த மூன்றினிடத்தே காணப்பட்ட உறவை விட இற்றைக்காலத்தில் இவைகளிடத்தே காணப்படும் உறவு மிகமிக நெருக்கமானது. நல்ல முற்போக்கான வாழ்வைக் காணவேண்டுமானால், இந்த மூன்றும் ஒருசேர போக்கு அடையவேண்டும். ஒன்றை முற்போக்கு அடையச் செய்துவிட்டு, மற்ற இரண்டையும் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கிவைத்தால், அதனால் எதிர்பார்க்கும் பலன் கிட்டாது; மக்கள் வாழ்வு முற்போக்கு அடைந்ததாகச் சொல்லிவிடமுடியாது. முக்கோண வடிவமுள்ள பந்தலை மேலே உயர்த்த வேண்டும் என்றால், மூன்று முனைகளிலும் கயிற்றைக் கட்டி, மேலே பூட்டையில் மாட்டி, மூன்று கயிறுகளையும் ஒருசேர இழுத்தால்தான் பந்தல் சீராக மேலே உயரும். அப்படிக்கில்லாமல் ஒருமுனையைமட்டும் பிடித்து இழுத்தால், பந்தலின் நிலை சீர்பட்டிருக்காது என்பதோடு அந்த ஒரு முனையையும ஓரளவுக்குத்தான் இழுக்க முடியும். அதுபோலவேதான், மக்கள் வாழ்வு உயரவேண்டுமானால், சமுதாயம்—அரசியல் — பொருளாதாரம் ஆகிய மூன்று நிலைகளும் ஒருசேர உயர்த்தப்படவேண்டும் என்கிறோம். இக்காரணங்கள் பற்றிதான் திராவிட முன்னேற்றக் கழகம் சமுதாயம் — அரசியல் —பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலே நின்று பாடுபடும் பணியிலும், அவைபற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

புதிய சீனாவை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மா-சே-துங் தமது **‘சீனாவின் புதிய சனநாயகம்’** என்ற சிறிய நூலில், “நாங்கள் சீனாவில் அரசியல்—பொருளாதாரப் புரட்சிகளுக்கு மட்டும் பாடுபடவில்லை, சமுதாயப் பண்பாட்டுப் புரட்சிக்கும் சேர்த்தே பாடுபட்டோம்” என்று கூறியுள்ளார்.

மூன்று சீர்திருத்தங்களில் எது தேவை என்றால், மூன்றும் தேவை என்பதுதான் விடையாக இருக்கமுடியும். மூன்றில் எது முதலில் செய்யபடவேண்டியது என்றால், மூன்றும் ஒருசேர செய்யப்படவேண்டும் என்பதுதான் விடையாக இருக்கமுடியும். 1970 வரையில் சமுதாயச் சீர்திருத்தம் செய்து முடிப்போம், 1970 இலிருந்து 1990 வரையில் அரசியல் சிர்திருத்தம் செய்துமுடிப்போம், 1990-க்குப் பிறகு பொருளாதாரச் சிர்திருத்

தம் செய்வோம் என்று முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாக எனப் பிரித்துக் கொண்டு செய்யக்கூடியவையல்ல இந்தச் சீர்திருத்தங்கள். இயலும் அளவுக்கு, ஒருசேர, மூன்று துறைகளிலும் சீர்திருத்தம் செய்துகொண்டுபோக வேண்டியதுதான் நாட்டுமக்களின் கடமையாகும்.

ஆனால் மூன்று சீர்திருத்தங்களுக்கும் உள்ள தொடர்பு எப்படி அமைந்திருக்கிறது என்றால், முற்போக்குச் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான், முற்போக்கு அரசியல் சீர்திருத்தம் ஏற்படமுடியும்; முற்போக்கு அரசியல் சீர்திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டுதான் முற்போக்குப் பொருளாதாரச் சீர்திருத்தம் ஏற்படமுடியும். சமுதாயப் புரட்சிக் கருத்துக்கள் நுழையாத உள்ளத்தில், அரசியல்—பொருளாதாரப் புரட்சிக்கருத்துக்கள நுழைய வழியில்லை. சமுதாயப் புரட்சிக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் அரசியல் பொருளாதாரப் புரட்சிக்கருத்துக்கள் தோன்றமுடியும். சமுதாயத்தை ஒருவனின் அறிவுக்கு (உள்ளத்துக்கு) ஒப்பிட்டால், அரசியலை அவனது ஆற்றலுக்கும் (உழைப்பிற்கும்), பொருளாதாரத்தை அவனது ஆக்கத்திற்கும் (உடலுக்கும) ஒப்பிடலாம். அறிவின் தூண்டுதலின் பேரிலேயே ஆற்றல் நிகழும்; ஆற்றலை ஒட்டியே ஆக்கம் பயன்படும். பிற்போக்கான சமுதாயக் கருத்துக்கள் குடியிருக்கும் உள்ளத்தில், முற்போக்கான அரசியல் பொருளாதாரக் கருத்துக்கள் மலர வழிபிறக்காது. இக்காரணம் பற்றிதான் மா-சே-துங், "புரட்சிகரமான சமுதாயப் பண்பாடு, மக்களின் வலிவுள்ள புரட்சிகரமான ஆயுதமாகும். புரட்சி வெடித்துக் கிளம்புவதற்குமுன்பு, சமுதாயப் பண்பாடு புரட்சிகரமான கருத்துக்களைப் பரப்புவதன்மூலம், புரட்சிக்கான பாதையைச் செப்பனிட்டுக் கொடுக்கிறது" என்று கூறியுள்ளார்.

மேற் கூறப்பட்டவைகளிலிருந்து சமுதாயப் புரட்சிக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான், அரசியல்—பொருளாதாரப் புரட்சிக் கருத்துக்களுக்கு வழிகோலமுடியும் என்பதையும், இயன்ற அளவுக்குச் சீர்திருத்தங்களை மூன்று துறைகளிலும் ஒருசேர செயயவேண்டும் என்பதையும், மூன்று சீர்திருத்தங்களும் ஒருசேர மக்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படும் என்பதையும் அறியலாம்.

வினா : மதத்தைப் பற்றி மார்க்சு கூறியதை இந்திய கம்யூனிசுட்டுகள் கடைப்பிடிப்பதில்லை என்று ஆனால் தி. மு. கழகத் தோழர்கள் கடைப்பிடிக்கிறார்கள் என்றும் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? உண்மையில் நேரடியாக மதத்தை எதிர்த்துப் போர்தொடுப்பதை மார்க்சும், ஏங்கல்சும் மிகமிகத் தாக்கியிருக்கிறார்களே, தி. மு. கழகம் அப்படியா செய்கிறது?

விளக்கம் : 'மதம் மக்களுக்கு அபின்' என்பது போன்ற கருத்துக்களை வெளிப்படையாக எழுதிக்காட்டுவதில் — எடுத்துக்காட்டுவதில் மார்க்சும், ஏங்கெல்சும், லெனினும் பின்வாங்கவில்லை; அவைகளை வெளிப்படையாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை, அவற்றை இரகசிய அறைக்கூட்டங்களில் மட்டும் சொல்லிக்கொண்டால் போதும் என்று அவர்கள் கருதவில்லை. அவர்களைப்போலவே தி. மு. கழகத்தார் மதத்தினால் ஏற்பட்டுள்ள—ஏற்படும் கேடுகளையும், மூடநம்பிக்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் வெளிப்படையாகவே எடுத்துச்சொல்ல—எழுதிக்காட்டத் தயங்குவதில்லை. ஆனால் இந்தியக் கம்யூனிசுட்டுக்கள் இந்நாட்டில் நிலவிவரும் மதமூடநம்பிக்கைகளையும், மதக்குருட்டுப் பழக்க வழக்கங்களையும வெளிப்படையாக எடுத்துச் சொல்லுவதில்லை—எழுதிக்காட்டுவதில்லை; அப்படிச் செய்ய அவர்கள் அஞ்சுகிறார்கள்—தயங்குகிறார்கள். எனவேதான் மதக் கருத்துக்களைப் பொறுத்தவரையில் உண்மையான மார்க்சியவாதிகள் தி. மு. கழகத்தாரேயன்றி, இந்தியக் கம்யூனிசுட்டுகள் அல்லர் என்று தி. மு. கழகத் தோழர்கள் சொல்லுகிறார்கள்.

நேரடியாக மதத்தை எதிர்த்துப் போர் தொடுக்கும் பண்பைத் தி. மு. கழகத்தார் பெற்றிருக்கவில்லை என்பதை வினா எழுப்புவோர்க்குக் கூற விரும்புகிறோம். நேரடியாக மதத்தை எதிர்த்துப் போர்தொடுக்கக் கூடாது என்பதுதான் மார்க்சுடையதும், ஏங்கல்சுடையதும் ஆன கொள்கை என்றால் அதே கொள்கை அளவில் நின்றுதான் தி. மு. கழகமும் பாடுபடுகிறது. மதநம்பிக்கையாளர்களின் போக்கை வலுக்கட்டாயமாக மதப்புரட்சியின் (பலாத்காரத்தின்) மூலம் மாற்ற, தி. மு. கழகம், நேரடிப்போராட்டத்தில், இதுவரையில் எங்கும் எப்பொழுதும் இறங்

...தில்லையே! அமைதியான முறையில் ...நத்து விளக்கம் செய்துவருகிறது. மத நம் ...க்கையாளர்களை அமைதியான முறையில் ...ற்றிவருகிறது. இது எந்தவகையிலும் ...ர்க்சுக் கொள்கைக்கு மாறுபட்டதல்லவே!

...பெரியார் இராமசாமி உருசியாநாடு சென் ...ருந்தபோது. மத மூடநம்பிக்கைகளையும்— ...ருட்டுப் பழக்க வழக்கங்களையும், மத எதிர்ப் ...க் கருத்துக்களையும் சுட்டிக்காட்டும் சுவ ...ரொட்டிகள் பல சுவர்களில் அரசாங்கத்தின் ...ர்பில் ஒட்டப்பட்டிருந்ததாகவும், அவற் ...றைத் தாம் கண்டதாகவும், இங்கு பொதுக் ...ட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார் ...ள். ஒரு படத்தில் ஒரு தொழிலாளி ஒரு ...லுவையைத் தலைகீழாக நிறுத்தி, அதன் ...டித்தண்டை இரண்டாகப் பிளந்து, ஒரு ...க்கத்தை ஒரு காலால் உதைத்துத் தள்ளிக் ...காண்டு மற்றொரு பக்கத்தை இருகைகளால் ...டித்து இழுப்பதைப்போலப் போடப்பட் ...ருந்ததாகவும் கூறினார்கள். மத எதிர்ப்பு ...ளக்கம் மார்க்சுக் கொள்கைக்கு மாறுபட்ட ...ாக, உருசியா நாட்டில், 1930-ஆம் ஆண்டு ...ாக்கில் கொள்ளப்படவில்லை என்பது பெரி ...ார் கூற்றினால் விளக்கமுறும்.

...தி. மு. கழகம் மதமூடநம்பிக்கைகளையும், ...தக்குருட்டுப் பழக்க வழக்கங்களையும் போக் ...ும் கருத்துவிளக்கம் செய்துவருகிறதேயல் ...ாமல், மத எதிர்ப்புப் போராட்டம் நடத்த ...ில்லை என்பதை ஐயுறுவோர் உணர்வார்க ...ாக!

❖ ❖ ❖

வினா: திராவிட முன்னேற்றக் கழகத்தார் 'ஒருகடவுள்' என்று சொல்லிவருகிறார்களே அந்த ஒரு கடவுள் எது?

விளக்கம்: திராவிட முன்னேற்றக் கழகம்' ...மூடப்பழக்கத்திற்குக் காரணமாகாத—குருட்டு நம்பிக் ...கைக்கு இடந்தராத—அறிவுவளர்ச்சிக்கு இடையூருக ...ற்காத—நல்வாழ்வுக்குக் கேடுபயக்காத ஒரு கடவுள் ...வேண்டுமானால் இருக்கட்டும்' என்னும் கருத்தைக் ...கொண்டிருக்கிறதேயல்லாமல், 'எப்படியாவது ...ஒரு கடவுள் இருந்தே தீரவேண்டும்' என்னும் கருத் ...தினைக் கொள்ளவில்லை.

'கடவுள்' என்ற சொல் காலவேறுபாட் ...டால் பல்வேறு பொருள்களைக் குறித்து நிற் ...கும் ஒரு சொல்லாகிவிட்டது.

கடவுள் எங்கேயோ இருந்துகொண்டு அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் ஆட்டிப்படைத்துக், காத்து, அழித்துக்கொண்டிருக்கிறார் என்ற கருத்தை மறுத்து, அப்படி ஒன்று இல்லை என்ற உணர்வோடு இருப்பவர்களைக் கழகம் வரவேற்கவே செய்கிறது; எதிர்ப்பதில்லை.

அப்படிப்பட்ட ஒன்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை என்ற உணர்வோடு இருப்பவர்களையும் கழகம் வரவேற்கவே செய்கிறது; எதிர்ப்பதில்லை.

'அறிவே கடவுள்', 'அன்பே கடவுள்', 'அருளே கடவுள்', 'உண்மையே கடவுள்' என்று ஏதேனும் ஒன்றைப் பகுத்தறிவு வழிப் போற்றுவதற்குரிய—பாராட்டுவதற்குரிய — பற்றுவைப்பதற்குரிய—மதிப்பு செலுத்துவதற்குரிய—வளர்ப்பதற்குரிய 'கடவுளா'கக் கருதுபவர்களைக் கழகம் வரவேற்கவே செய்கிறது; எதிர்ப்பதில்லை.

மூடத்தனத்திற்கும் குருட்டு நம்பிக்கைக்கும் காரணமாகும் கடவுட் கருத்துக்களையும் காரண காரிய விளக்கத்திற்குப் பொருந்திவராத கடவுட் கருத்துக்களையும் மக்கள் மனதைவிட்டு அகற்றவேண்டும் என்பதுதான் கழகத்தின் முக்கிய குறிக்கோள்.

தாம் ஏதேனும் ஒரு கடவுளிடம் பற்றுக்கொள்ளவேண்டும், அந்த ஒரு கடவுளை எந்தக் கடவுளாகக் கொள்ளலாம் என்று எவரேனும் கேட்டால், அந்த ஒரு கடவுள் 'அறிவுக்கடவுளா'க இருக்கட்டும் என்று கூறுகிறோம். 'அறிவு' என்னும்போது யாதொரு தீமையும் பயவாத நல்லறிவைத்தான் குறிப்பிடுகிறோம். மற்ற 'அன்பு', 'அருள்', 'உண்மை' போன்ற நற்பண்புகளுக்கு அடிப்படையாக அறிவே விளங்குவதால், அந்த 'அறிவை'யே போற்றுதற்குரிய—பற்றுக்கொள்வதற்குரிய—வளர்த்தற்குரிய — மதித்தற்குரிய கடவுளாகக் கொள்ளலாம் என்று குறிப்பிடுகிறோம்.

எப்படிக் கடவுள் இருக்கவேண்டும் என்பதைவிட, எப்படியெல்லாம் கடவுள் இருக்கக்கூடாது என்பதைக்கூறுவதையே சீர்திருத்த முறையாகக் கொண்டிருக்கிறோம்.

❖ ❖ ❖

வினா: பாக்கிஸ்தான் பிரிவினையைத் திராவிடநாட்டுப் பிரிவினையோடு ஒப்பிட்டுப் பேசுவது சரிதானா?

விளக்கம்: பாக்கித்தான் எந்தெந்தக் காரணங்களுக்காகப் பிரிந்ததோ அதே காரணங்களுக்காகத்தான் திராவிட நாட்டுப் பிரிவினையும் கோரப்படுகிறது என்று நாம் சொல்லவில்லை. நாம் அந்தவகையில் அல்ல பாக்கித்தானைச் சுட்டிக்காட்டுவது.

இந்தியாவிலிருந்து எந்த ஒருநாட்டையும் பிரிக்க முடியாது, அப்படியே பிரித்தாலும் அது வாழமுடியாது என்று கூறிடும் அன்பர்களுக்குப் பாக்கித்தான் பிரிந்ததையும், பிரிந்து அது வாழுவதையும் சுட்டிக்காட்டுகிறோம் அவ்வளவுதான்.

திராவிடநாடு பிரிவினை கற்பனை, அது பகற்கனவு என்று கூறிடுவோர்க்குப் பாக்கித்தான் பிரிவினையைச் சுட்டிக்காட்டுகிறோம்; அவ்வளவுதான். பாக்கித்தான் பிரிவினை பகற்கனவு என்று பலர் சொல்லிக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் கூற்று பிறகு எப்படிப் பொய்த்துவிட்டதோ, அப்படியே திராவிடநாடு பிரிவினையானது பகற்கனவு என்று இப்பொழுது கூறிடுவோர் கூற்றும் பிற்பாடு பொய்த்துவிடும் என்பதை உணர்த்துவதற்காகப் பாக்கித்தானைச் சுட்டிக்காட்டுகிறோம்.

குறிப்பிட்ட சில விளக்கங்களுக்காக ஒன்றின் சில தன்மைகளை எடுத்துக்காட்டாகக் காட்டும்போது, எல்லாவற்றிற்கும் அந்த ஒன்றின் எல்லாத் தன்மைகளையுமே எடுத்துக்காட்டாகக் கொள்ளலாமா என்று யாரேனும் கேட்டால் அது அவரின் அறியாமையைத்தான் புலப்படுத்தி நிற்கும்.

பாலைப்போல் கொக்கு வெள்ளை நிறமுடையது என்று கூறினால், கொக்கு என்ன குவளையால் எடுக்கிற அளவுக்கு தண்ணீராகவா இருக்கும் என்று யாரேனும் கேட்பார்களானால், அவர்கள் எவ்வளவு அறியாமை படைத்தவர்களோ, அவ்வளவு அறியாமை படைத்தவர்கள்தான், பாக்கித்தானைப் போலவா எல்லாவகையிலும் திராவிடநாடும் இருக்கும் என்று கேட்பவர்களும்.

எந்தப் பொருளை எந்தப் பொருளோடு எந்தப் பண்பில் ஒப்பிடுகிறார்கள் என்பதைக் கண்டு அந்த அளவோடுதான் ஒப்பிடுதலும் நிற்கவேண்டும். பாக்கித்தானைத் திராவிட நாட்டோடு ஒப்பிடுகிறோம் என்றால் எந்தெந்த நிலைமைகளில் என்பதுதான் கவனிக்கப்பட வேண்டுமே ஒழிய, எல்லாவற்றிலும் அப்படித்தான் இருக்குமா என்று கேட்பது குறையறிவின்பாற்பட்டதாகும்.

விரைவான இரயில்வண்டி

மணிக்கு 151 மைல் வேகத்தில் செல்லும் பிரெஞ்சுப் புகைவண்டிதான், இன்றைய நிலையில், உலகில் மிக விரைந்து செல்லும் வண்டியாகக் கருதப்படுகிறது.

1954-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 21-ஆம் நாள்தான் பிரெஞ்சுப் புகைவண்டி ஒன்று மேற்கண்ட வேகத்தை நிலைநாட்டிற்று.

சென்ற இருபது ஆண்டுக் காலத்தில் உலகில் புகைவண்டிகள் வரலாற்றில் எவ்வளவோ வளர்ச்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1930-ஆம் ஆண்டிற்கு முன்னால் மணிக்கு 100 மைலுக்குமேல் போகும் வண்டியைக் காணமுடியாமலிருந்தது. 1935-ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்களில் சில்வர் சூப்பிலி (Silver Jublice) என்ற பிரித்தானியர் புகைவண்டி மணிக்கு 112½ மைல் வேகத்தை எட்டிப்பிடித்தது. 1938-ஆம் ஆண்டில் சூலைத் திங்களில் மல்லார்டு (Mallard) என்ற பிரித்தானிய நீராவிப் புகைவண்டி மணிக்கு 126 மைல் ஓடிக் காட்டியது. நீராவிப் புகைவண்டிகளில் இதுநாள்வரையில் மிகவேகமாக ஓடும் வண்டி அதுவாகத்தான் இருந்துவருகிறது.

செர்மனியில் செய்யாவியில் ஓடும் இரயில்வே கார் மணிக்கு 143 மைல் வேகத்தில் சென்றுகாட்டியது. இது ஒரே பெட்டியைக் கொண்டது ஆகும்.

பல பெட்டிகள் சேர்க்கப்பட்ட வண்டிகளில் செர்மனி மின்வண்டி 1939-ஆம் ஆண்டு சூன் திங்களில் மணிக்கு 133¼ மைல் ஓடியது. இதுகாறும் தண்டவாளத்தில் ஓடும் பல பெட்டிகள் கொண்ட வண்டிகளில் இதுதான் மிக வேகமாக ஓடுவதாக இருந்து வருகிறது.

இறந்தகாலங்களில் நிலைநாட்டப்பட்ட வேகங்களையெல்லாம் மிஞ்சிவிடுகிற மாதிரியில், பிரெஞ்சு நேசனல் இரயில்வே (French National Railways) மணிக்கு 151 மைல் வேகத்தில் செல்லக்கூடிய மின்வண்டியை ஓட்டிவருகிறது. இதுதான் இன்றைய நிலையில் இரயில்வண்டியின் நிலைநாட்டப்பட்ட மிக்க வேகமாகும்.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

இடுப்புப்பட்டி கால்சட்டை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இருந்து 22 வரை $4\frac{1}{2}$ அங்.
(29, 22-க்கும் உள்ள அளவில் பாதி)
இருந்து 31 வரை 5 அங்.
இருந்து 18 வரை 11 ,,
($\frac{1}{4}$ புட்டம் சுற்று அளவு + 2 அங்.)

30, 18, 25 எண்கள்வரை பின்பக்க வளைவு படத்தில்உள்ளபடி வரையவும்.

30, 18, 25 எண்ணுள்ள பின்பக்க வளைவுக்கும் 25, 27, 27 எண்ணுள்ள அடிக்கால்களுக்கும், தொடர்ந்து கால்பட்டிவரை தையலுக்குத் துணிவைத்து வெட்டவும்.

தையலுக்கு $\frac{1}{4}$ அங்குலம் வைத்துப் படம் வரையப்பட்டுள்ளது.

ஒவ்வொரு எண்ணுக்கும் படத்தில் வரைந்துள்ளபடி கோடுகளையும் வளைவுகளையும் இணைத்த பிறகே வெட்டத்தொடங்கவும்.





தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 2 1953 - 54

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்

ஒவ்வொன்றும்

விலை ரூ. 8 00

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"

26, நைனியப்பன் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.

at MANRAM ACHAKAM at 26. Nainiappan St, Mannadi, MADRAS